உ

# அருள் ஒளி



கந்தசஷ்டி விழாச் சிறப்பு மலர்

வெளியீடு :
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்
தெல்லிப்பழை, இலங்கை
2017

128

இலண்டன் கீத்துறு விமான நிலையத்தில் லண்டன் சைவமுன்னேற்றச்சங்க மூத்த தலைவர்கள் திரு. சி. இராமநாதன், திரு.சூ. பாலசிங்கம் ஆகியோர் செஞ்சொற்செல்வரை வரவேற்கும் காட்சி.






இந்தியா திருச்செந்தூர் முருகன் ஆலயத்தில் கந்தசஷ்டி காலத்தில் தொடர் சொற்பொழிவாற்றிய செஞ்சொற் செல்வர் கௌரவிக்கப்படும் காட்சி.

உ

# அருள் ஒளி

( மாதாந்த சஞ்சிகை )





ஆசிரியர்
கலாநிதி ஆறு. திருமுருகன் அவர்கள்
உதவி ஆசிரியர்
திரு. சு. ஏழூர்நாயகம் அவர்கள்

ஐப்பசி மாத மலர்
2017

வெளியீடு : ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பழை, இலங்கை.
e-mail : thurkaiammantemple@gmail.com
face book : tellidurga@gmail.com

பதிவு இல.: ISSN 2362 - 0587
ISBN 978 - 955 - 23 - 0019-3


## அரசியல் கைதிகளை உடன் விடுதலை செய்யவேண்டி அனைவரும் பிரார்த்திப்போமாக.

எங்கள் மண்ணில் கடந்த 3வார காலமாக அனைவராலும் பேசப்படுகின்ற முக்கிய விடயம் தமிழ் அரசியல் கைதிகள் தொடர்பானது. நீண்ட காலமாக நடைபெற்ற யுத்தத்தின் விளைவாக பல தமிழ் இளைஞர்கள் சிறைக் கூடங்களில் துன்புறுவது அனைவரும் அறிந்ததே. பொதுவாக அரசியல் கைதிகளை மன்னித்து அவர்கள் சுமூகமாக வாழ ஏற்பாடு செய்வதே மனிதநேயக் கடமையாகும். இலங்கை அரசியல் வரலாற்றில் தென்இலங்கை இளைஞர்கள் மன்னிக்கப்பட்டமை அனைவரும் அறிவர். 1971ம் ஆண்டு கிளர்ச்சியில் ஈடுபட்ட இளைஞர்கள் பலர் கைது செய்யப்பட்டு சிறைக்கூடங்களில் இருந்தனர். அவர்கள் மீது தொடரப்பட்ட வழக்குகள் யாவும் இரத்துச் செய்யப்பட்டு பொது மன்னிப்பு வழங்கப்பட்டது. 1987ம் ஆண்டு கிளர்ச்சியில் ஈடுபட்டவர்கள் இதேபோல் மன்னிக்கப்பட்டனர். ஆனால் தமிழ் அரசியல் கைதிகள் காலத்துக்குக் காலம் மன்னிப்பு இன்றி சிறைக்கூடங்களில் தவிப்பது இலங்கையில் இயல்பாகிவிட்டது. 1983 ஜூலை கலவரத்தின்போது சிறைக்கூடத்தில் இருந்த கைதிகளில் ஒரு பகுதியினர் அடித்துக்கொல்லப்பட்டமை மறக்கமுடியாத சம்பவமாகும்.

கடந்த சில வாரங்களாக உண்ணாவிரதம் இருக்கும் தமிழ் அரசியல் கைதிகள் தொடர்பாக தமிழ் மக்கள் மிகுந்த கவலையோடு ஏது நடக்கும் என்ற ஏக்கத்தோடு இருந்தனர். உண்மையில் சிறைக் கூடங்களில் இருக்கும் அரசியல் கைதிகளை விடுவிப்பது உயர்ந்த

அறமாகும். அரசாங்கமும், அரசியல்வாதிகளும் இவ் விடயத்தில் உடன் நடவடிக்கை எடுத்தல் காலத்தின் கட்டாயமாகும்.

சகல சைவமக்களும் சிறையில் உள்ள கைதிகளின் விடுதலைக்காக பிரார்த்திப்போம். கைதிகளின் விடுதலை தொடர்பாக சகல ஆத்மீக தலைவர்களும் அக்கறை கொள்ளவேண்டும். கௌரவ ஜனாதிபதி சிறையில் உள்ளவர்களை விடுதலை செய்து அவர்கள் சீரிய வாழ்வு வாழ வழி செய்ய வேண்டும்.

– ஆசிரியர்


## சிவபூமி கண்தான சபை

தானங்களில் சிறந்த தானமாக கண் தானத்தைச் செய்ய முன் வாருங்கள். உங்கள் இறப்புக்குப் பின் பார்வையற்றிருக்கும் ஒருவருக்கு ஒளி கொடுக்க நீங்கள் உதவுங்கள். வாழும் போதே இப்புண்ணிய காரியத்திற்கு ஒப்புதல் தாருங்கள்.

**தொடர்புகளுக்கு**

**கலாநிதி ஆறு. திருமுருகன்**
**021 - 222 6550**

கண் வைத்திய நிபுணர்
**Dr. ச. குகதாசன்**
**021 - 222 3645**

# கந்தசஷ்டி விரதம்

"வீரவேல் தாரைவேல் விண்ணோர் சிறைமீட்ட
தீரவேல் செவ்வேல் திருக்கைவேல் வாரி
குளித்தவேல் கொற்றவேல் சூர்மார்பும் குன்றும்
துளைத்தவேல் உண்டே துணை...."

என்னும் சிறப்புக்களை உடையது சகலலோக அன்னை பராசக்தி திருக்குமரனுக்கு வழங்கிய திருக்கைவேல். வேலே இத்தகு சிறப்புடையதெனில் அதனைத் தாங்கிய சிங்கார வடிவேலனின் சிறப்பும் பெருமையும் அளவிடதற்கரியது. இம்மாதம் 6ஆம் திகதி முருகனுக்கே உரியதானதும் வாழ்வில் எல்லா நலன்களையும் வாரி வழங்கும் கந்தசஷ்டி விரதம் ஆரம்பமாகி 11ஆம் திகதி சூரசம்ஹாரமும் மறுநாள் பாரணையும் அமையப் பெறுகிறது.

ஐப்பசி மாத தீபாவளி அமாவாசையின் பின் அதாவது வளர்பிறை பிரதமை முதல் சஷ்டி வரையான ஆறு தினங்களும் கந்தசஷ்டி விரதம் நோற்கப்படுகின்றது. இவ்விரதம் முருகப் பெருமானது தோற்றத்துடன் நெருக்கமான தொடர்புடையது. தாரகன், சிங்கமுகன், சூரபன்மன் ஆகிய மூன்று அசுரர்களும் அசமுகி என்பாளும் பிரமதேவரது புதல்வரான காசிப முனிவருக்கும் மாயை என்ற அசுரகுலப் பெண்ணுக்கும் பிறந்தவர்களாவர். இச்சகோதரர்கள் பிறப்பினால் இயல்பாகவே அமையப்பெற்ற அசுரத் தன்மையில் 108 யுகங்கள் உயிர்வாழவும் 1008 அண்டங்களையும் அரசாளுகின்ற வரத்தைப் பெற்றனர். மேலும், போருக்குச் செல்வதற்கு இந்திரஞாலம் என்ற தேரையும் சிவபிரானை நோக்கித் தவமிருந்து பெற்றனர். இத்தால் கர்வம் கொண்டு தேவர்களை வருத்திட தேவர்கள் தமக்கு அருள் பாலித்துக் காத்தருளும்படி முழுமுதற்கடவுளான பரமேஸ்வரனைப் பணிந்தனர்.

கருணையே உருவான திருநீலகண்டர் தமது ஈசானம், அகோரம், தத்புருஷம், வாமதேவம், சத்தியோஜாதம் ஆகிய ஐந்து முகங்களினதும் அவரது ஆறாவது முகமான அதோமுகத்தினதும் நெற்றிக்கண்களினின்று புறப்பட்ட தீப்பொறிகள் தண்டாமரைகள் நிறைந்த சரவணப்பொய்கையில் சூரியனையே தன் நாயகனாய் எண்ணி மணம் பரப்பி நின்ற ஆறு தாமரைப் பூக்களில் வீழ்ந்தன. பல்லாயிரம் கோடிச் சூரியப் பிரகாசத்துடன் ஆறு குழந்தைகள் தோன்றிட கார்த்திகைப் பெண்களும் அங்கு தோன்றி அந்த ஆறு குழந்தைகளையும் சீராட்டிப் பாலூட்டி வளர்த்து வந்தனர். தன் குழந்தைகளைப் பார்க்கும் அவலுடன் பராசக்தி அன்னையும் அங்கு எழுந்தருளினாள். தாய்மையே உருவான உமையவள் தன் ஆறு குழந்தைகளையும் அன்புடன் கட்டியணைத்திட இவ்வுலகமுய்ய ஒரு திருமுருகனாக மால்மருகன் சரவணபவன் தோன்றினான்.

பன்னிரு திருக்கரங்களுடனும் பிரகாசமான ஆறு திருமுகங்களுடனும் அழகின் அழகாக தேவசேனாதிபதியாக தேவரும் முனிவரும் வாழ்த்திட அகிலலோக அன்னை

மலைமகள் பார்வதி தந்த தனிப்பெரும் சக்தி வேலுடன் சூரபன்மனைச் சம்ஹாரம் செய்திடப் புறப்பட்டார். தாரகனையும் அவனுக்குத் துணையாய் நின்ற கிரௌஞ்சத்தினையும் பிளந்து சிங்கமுகாசுரனையும் வதம் செய்து பின் சூரனின் படைகளையும் அழித்ததுடன், அவனுக்கு முருகன் தன் திருப்பெருவடிவமாக எல்லாம்வல்ல பரம்பொருள் தாமே என்றிடும் பரமேஸ்வர வடிவம் காட்டி சிவனும் அவன் மகனும் மணியும் ஒளியும் போன்று ஒருவரே என்றுணர்த்தினர். ஆயினும் தன் பிறவிக்குணம் மாறாத சூரபன்மன் நடுக்கடலில் மாமரமாகத் தோன்றிட சூரபன்மனை இருகூறாகத் தன் ஞானசக்தியான திருநெடுவேலினால் பிளந்து தன்னுடைய ஆணவ மலத்தின் வலியிழந்து ஒரு பகுதி மயிலாகி வாகனமாகிட மற்றைய கூறு சேவலாகி சேவற்கொடியாய் முருகனின் திருக்கரங்களில் அமையப்பெற்றது. இறையருளால் ஆணவம் வலியிழந்து ஆன்மா பரம்பொருளிளின் திருவடி அடைந்ததெனும் மறைபொருளை உணர்த்த அனுஷ்டிக்கப்படும் விரதமே கந்தஷஷ்டி விரதம்.

சட்டியில் இருந்தால் அகப்பையில் வரும் என்தபற்கேற்ப கந்தசஷ்டியை முறையாகக் கைக்கொள்ளுவதால் அகம் என்னும் பையினுள் நல்லெண்ணங்களும் பக்தி எனும் பாதையால் எழுந்த அமைதியும் அமையும் என்பது மறைபொருளாகும். கந்தசஷ்டி விரதம் எனும் போது அதற்கென சில விரத நியதிகள் தனித்துவம் பெற்றுத்திகழ்கின்றன. அவற்றுள் சில வருமாறு :

அமாவாசையில் ஒருவேளை உணவுண்ணல்.
ஆரம்பநாளில் ஆலயத்தில் தர்ப்பை அணிந்து காப்புக்கட்டலும் சங்கற்பம் செய்தலும்
ஆறு தினமும் முருகன் ஆலயத்தில் இறைவழிபாடு, புராண படனம் போன்றவற்றில் ஈடுபடல்.
இறுதி நாளில் காப்பை அவிழ்த்து, தட்சணையுடன் அர்ச்சகரிடம் சமர்ப்பித்தல்.

7ம் நாள் அதிகாலை நீராடி அனுஷ்டானங்களை நிறைவேற்றிப் பாரணைப்பூசை முடிந்ததும் மகேசுர பூசை செய்து விரதத்தை நிறைவு செய்தல். இவ்விரதத்தைக் கடுமையாய் கடைப்பிடிப்போர் ஆறு நாளும் உபவாசம் இருப்பர். சிலர் ஐந்து தினம் ஒரு வேளை உண்டு ஆறாம் நாள் உபவாசமிருப்பர். முருகப் பெருமானின் திருக்கரத்தில் விளங்கும் வேலின் மகிமை மிகப்பெரிது. முருகனுக்கே உரிய படையாகிய அதனை படை அரசு என்று பாம்பன் சுவாமிகளும் சக்தி படைத் தெய்வம் என்று தண்டபாணி சுவாமிகளும் போற்றினார்கள். வேலின் பெருமையை அருணகிரிநாதர், சிதம்பர சுவாமிகள், ஆதிசங்கரரும் போற்றியுள்ளனர். ஆகவே வேலுண்டு வினையில்லை என்று எண்ணி எண்ணி மகிழ்ந்து வேல் வேல் வெற்றி வேல் என்றும் வேல் முருகனுக்கும் அரோகரா என்றும் போற்றுகின்றோம்.

"தோகை மேல் உலவும் கந்தன் கரத்திருக்கும் வெற்றி வாகையை சுமக்கும் வேலை வணங்குவது எமக்கு வேலை' என்று மகாகவி பாரதி பாடியுள்ளார். அத்துடன் வேலைப் போன்று மயிலுக்கும் பெருமையுண்டு. மயில்வாகனன் என்னும் பெயர் மயிலை

வாகனமாக உடையவன் என்றும் வேலாயுதன் என்னும் பெயர் வேலாயுதத்தைத் திருக்கரத்தில் தாங்கிய பெருமான் என்றும் பொருள் தரும். மயில் எம்பெருமானுக்கு வாகனமாக இருந்து பக்தர்களால் பெருமையுடன் வணங்கப்படுகின்றது. மயிலுண்டு பயமில்லை என்பது ஆன்றோர் வாக்கு. யானை, ஆடு, மயில் ஆகிய மூன்று முருகனுக்கு வாகனமாக விளங்கிய போதிலும் மயிலே மிகவும் சிறப்புப் பெறுகின்றது. வேதங்கள் கூறும் மகாமந்திரமே மயிலாக இயங்குகின்றது.

மேலும் கந்தசஷ்டி விரதகாலத்தில் முருகனின் சிறப்புக்களை எடுத்தியம்பும் பாலதேவராய சுவாமிகள் அருளிய கந்தசஷ்டி கவசம், பாம்பம் சுவாமிகள் அருளிய ஷண்முககவசம், கந்தபுராணம் போன்ற நூல்களைப் பாராயணம் செய்தல் சிறப்பு. கவசம் எனும் போது அது போரிற்குச் செல்லும் வீரனைப் பாதுகாக்க உதவும் அங்கியாகும். அதே போன்று முருகனின் அடியார்களை பிற துன்பங்களின்று பாதுகாக்கும் கவசமாக இச் ஷண்முக கவசமும் கந்தசஷ்டி கவசமும் அமைகின்றன. பாவங்களும் தீமைகளும் நிறைந்த இந்த கலியுகத்தில் இவற்றினின்று எம்மைப் பாதுகாக்க விரத அனுட்டானங்களும் வழிபாடுகளுமே துணைபுரிகின்றன. அவ்வகையில் கலியுகவரதனாக அருளும் முருக வழிபாடு எமக்கு மிகவும் அவசியம்.

கந்தசஷ்டி விரத பூர்த்தி நாள் ஆலயங்களில் காலையில் பட்டாபிஷேகமும் மாலையில் திருக்கல்யாண வைபவமும் நடைபெறும். முருகனின் இச்சா சக்தியாகவும் கிரியா சக்தியாகவும் மாறிலா வள்ளிநாயகியும் தெய்வானை அம்மையும் திகழ்கின்றனர். அவர்களது திருவருளையும் பெறுவதற்கு கந்தசஷ்டி விரதகாலமே சிறப்பானது. இவ்வாறான சிறப்புக்களையுடைய கந்தசஷ்டி விரதகாலத்தில் அடியார்கள் யாவரும் ஆசாரசீலராய் ஆலயம் சென்று கஜவல்லி, மகாவல்லி சமேதரான ஷண்முகப் பெருமானது திருவருளைப் பெற்று வாழ்வில் குறைகளின்றி வாழ்வோமாக.

## தீபத்திருநாளில்

**தீயைப் போல் நிமிர்ந்து நிற்போம்**
**தீய எண்ணங்களுக்கு தீயை மூட்டுவோம்**
**தீய செயல்களுக்கு தீயை மூட்டுவோம்**
**தீய குணங்களுக்கு தீயை மூட்டுவோம்**
**தீயவை அனைத்துக்கும் தீயை மூட்டுவோம்**

**– விஜயகுமார்**

# கந்தசஷ்டி விரத முறைகள்

ஒவ்வொரு வருடமும் ஐப்பசி மாதம் சுக்கில பட்சத்துப் பிரதமை முதல் சஷ்டி வரையிலான ஆறு நாட்களில் முருகன் பக்தர்கள் கந்தசஷ்டி விரதத்தை கடைப்பிடிக்க வேண்டும்.

முருகன் கோயில் உள்ள எல்லா இடங்களிலும் கந்தசஷ்டி விரதம் ஒரு பெருவிழாவாக நடக்கும். ஆறுபடை வீடுகளான திருச்செந்தூர், திருப்பரங்குன்றம், பழனி, சுவாமிமலை, திருத்தணிகை, பழமுதிர்ச்சோலையிலும், இலங்கையில் நல்லூர், சன்னிதி, கதிரமலை (கதிர்காமம்), மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில்களிலும் மகிவும் சிறப்பாக இவ்விழா நடைபெற்று வருகின்றது.

**கந்தசஷ்டி விரதமுறை**

விரதத்திற்கு முதல் நாளன்றே வீட்டினைக் கழுவிச் சுத்தப்படுத்தி மஞ்சள் நீர் தெளித்தல் அவசியம். விரதநாளன்று அதிகாலையில் துயிலெழுந்து நீராடி, தோய்த்துலர்ந்த ஆடைகளை அணிந்து, காலையும் மாலையும் வீட்டின் சுவாமியறையில் விளக்கேற்றி, வீபூதி பூசி, தேவாரங்கள் பாடுதல் வேண்டும். அத்துடன் கோயில் வழிபாடு செய்தல் மிகவும் நன்று.

கேதாரகௌரி விரதம் பூர்த்தி செய்து கந்தசஷ்டி விரதம் பிடிப்போர், காலையில் நீராடி பூசை முடித்து தீர்த்தத்தை உட்கொண்டு அதன்பின் கந்தசஷ்டி விரதத்தைக் கடைப்பிடிக்கவும்.

ஊனினை உருக்கி, உள்ளொளி பெருக்கும் இவ்விரதத்தை தம் உடல் நிலைக்குத் தக்கதாகக் கடைப்பிடிப்பர். சிலர் 6 நாட்களும் எவ்வித அன்ன ஆகாரம் இன்றியும், சிலர் பானம் மட்டும் அருந்தியும், பலர் முதல் 5 நாட்களும் ஒரு நேரம் உணவு உண்டும் (பாலும் பழமும்) கடைசி நாளான 6ம் நாள் முழு உபவாசத்துடன் நித்திரை விழித்திருந்தும் 7ம் நாள் காலையில் முருகனை வழிபட்டபின் பாரணை மூலம் விரதத்தைப் பூர்த்தி செய்வர்.

**கந்தசஷ்டி விரதத்தில் படிக்கவேண்டியவை**

இவ்விரதத்தின் போது தினமும் கந்தசஷ்டி கவசம், கந்தரலங்காரம், கந்தரனுபூதி, திருப்புகழ், கச்சியப்பசுவாமிகளின் கந்தபுராணம் ஆகியவற்றைப் படித்தால் என்னவென்று சொல்லமுடியாத மன அமைதி நிலவும். இதனை ஒவ்வொருவரும் உணர்ந்திருப்பர்.

**கந்தசஷ்டி விரதத்தின் பலன்**

குடும்பத்தில் துன்பங்கள் நீங்கவும், வேலை வாய்ப்பு, கடன் தொல்லை நீங்கவும் இவ்விரதத்தைக் கடைப்பிடிப்பது நன்று. "சட்டியில் இருந்தால் அகப்பையில் வரும்"

என்பது பழமொழி. இதன் உண்மையான பொருள், சஷ்டியில் விரதமிருந்தால் கருப்பையில் குழந்தை உண்டாகுமென்பதாகும். எனவே குழந்தை வரம் வேண்டும் பெண்களுக்கு இது மிகவும் சிறந்த விரதமாகும். சுருக்கமாகச் சொன்னால் இவ்விரதத்தைக் கடைப்பிடித்து விரும்பிய பலனைப் பெறலாம்.

## ஆலயத்தின் நுழைவாயிலின் குறுக்காக இருக்கும் படிக்கட்டை ஏன் தாண்டிச்செல்ல வேண்டும் தெரியுமா?

ஆலயத்தினுள் நுழையுமுன் முதலில் நமது பாதத்தைக் கழுவவேண்டும். பின் கால், கை ஆகியவைகளை கழுவிய பின், சில துளிகளை எடுத்து தலையைச் சுற்றி வட்டமிட்டு தெளித்துக் கொள்ளவேண்டும். இதன் மூலம் நம் உடலைத் தயார்படுத்திக் கொண்டு முதலில் கோபுரத்தையும் அதிலுள்ள கலசங்களையும் பார்த்து வணங்கவேண்டும். பின்னர் வாயிற் காப்போர்களான துவாரபாலகர்களின் அனுமதியை வாங்கிக்கொண்டு உள்ளே செல்லவேண்டும். உள்ளே செல்லமுன் அங்குள்ள வாயிற்படியைக் கடந்து செல்லவேண்டும். ஏனென்றால், அந்தப் படியைத் தாண்டும்போது "நான் கொண்டுவந்த எதிர்மறை வினைகள், எதிர்மறை எண்ணங்கள், கெட்ட செயல்கள், கவலைகள் எல்லாவற்றையும் இங்கேயே விட்டு உள்ளே செல்கின்றேன். இனி ஆண்டவனின் கருணையுடன் கூடிய ஆசீர்வாதமும் நேர்மறை (நல்ல) வினைகளுமே எனக்குக்கிடைக்கவேண்டும் ஆண்டவா" என்று கும்பிட்டவாறு அந்தப் படியைத் தாண்டவேண்டும். அந்தப் படியின் மேல் நின்று கடந்தால் நாம் அவற்றைக் கூடவே எடுத்துச் செல்வதாக அர்த்தம்.

ஒரு ஆலயம் என்பது ஒரு நாள் முழுவதும் கூறப்படும் மந்திரங்களாலும், நாதஸ்வரம், கெட்டிமேளச் சத்தங்களாலும் பேசப்படும் மங்களகரமான வார்த்தைகளாலும், முழுதும் நேர்மறை எண்ணங்களாலேயே நிரம்பியிருக்கும். எனவே தான் கோயிலுக்குச் சென்று அந்த நேர்மறை எண்ணங்களைப் பெற்று உயர்வுடன், மனநிம்மதியுடனும் வாழுங்கள் என்று வாழ்த்துகிறோம்.

# அகத்தின் இருளைப் போக்கும் தீபவழிபாடு

தீபவழிபாடு தமிழர்களின் வழிபாடு. அது பண்டைய காலத்திலிருந்து வழிபடப்பட்டு வருகின்றது. தீபமேற்றுவதால் அஞ்ஞான இருள் நீங்கி, மெய்ஞ்ஞான வெளிச்சம் கிடைக்கின்றது. இதுவே உயிர்களுக்கு பேரானந்தத்தைத் தரக்கூடியது. தீப வழிபாடு பற்றி சங்க இலக்கியங்களிலிருந்து திருஞானசம்பந்தர் தேவாரம் வரை பல குறிப்புக்கள் காணப்படுகின்றன.

அங்காரகன் மகிமை கார்த்திகை மாதம், கார்த்திகை நட்சத்திர நன்னாளில் மாலை நேரத்தில் வீடுகளில் தீப விளக்குகள் வரிசையாக ஏற்றிக் கொண்டாடப்படும். இதற்கு சூரிய வழிபாடே காரணமாகும். கார்த்திகை மாதம் சூரியன் விருச்சிக ராசிக்குள் நுழைகிறார். விருச்சிக ராசி செவ்வாய் பகவானுக்கு உரியது. சிவபெருமானின் நெற்றிக் கண்ணிலிருந்து தோன்றிய வியர்வையை பூமாதேவி தாங்கிக்கொண்டு, அதனால் உண்டான குழந்தையை வளர்த்து வர, அந்தக் குழந்தை வளர்ந்து சிவனைத் துதித்து பெரும் தவம் செய்ய தவத்தினால் தேகம் முழுக்க அக்கினியாக, தவத்தில் பெரிதும் மகம் மகிழ்ந்து சிவபெருமான் அவருக்கு, கிரஹ பதவி அளித்தார். கிரஹ பதவி பெற்றவர் அங்காரகன் எனும் செவ்வாய் பகவான். பூமிகாரகன் என்றும் பூமி புத்திரன் என்றும் போற்றப்படுவார். அவரும் அக்கினி வர்ணமாகக் காட்சியளிக்கக்கூடியவர்.

கிருத்திக நட்சத்திரத்திற்குரிய தெய்வம் அக்கினி பகவான். சூர்ய அக்கினி அம்சம், கிருத்திகை அக்கினி அம்சம், அங்ஹாரக அக்கினி அம்சம் இந்த மூன்றும் இணைவதால் அன்று மஹாதீபம் என்றும் கார்த்திகை தீபம் என்றும் தீபமேற்ற மிக உகந்த நன்னாளெனவும் சாஸ்திரங்கள் கூறுகின்றன. லட்சுமி அம்சம் திருக்கார்த்திகை தினத்தன்று கிலியஞ்சட்டி எனப்படும் களிமண்ணால் செய்யப்படும் விளக்கில் பசுநெய் அல்லது நல்லெண்ணை விட்டு பஞ்சுத்திரி போட்டு அதில்தான் விளக்கு ஏற்றவேண்டும். வீட்டு வாசலில் இலட்சுமியின் அம்சமான குத்துவிளக்கில் தீபமேற்ற வேண்டும். விளக்கிற்கு பசுநெய் பயன்படுத்துவதற்கு ஒரு காரணமும் இருக்கிறது. தேவர்கள் மற்றும் அனைத்து தெய்வங்களின் வசிப்பிடமாக இருப்பது பசு. பசுவின் பாலில் இருந்து உருவாகும் நெய்யில் அம்பிகை வாசம் செய்வதாக ஐதீகம். ஆகவே தீபத்தில் பசுநெய் இடுவதால் அது சிவமாகிய ஜோதியுடன் சேர்ந்து, "சிவசக்தி" சொரூபமாகிறது. விளக்கில் வாசம் செய்பவள் மகாலட்சுமி. திருவிளக்கை தீபலட்சுமி என்பர். துர்க்கையின் வடிவங்களிலும் தீபதுர்க்கை உண்டு. தீபத்தில் தீபலட்சுமியாகத் திகழ்பவள், வைகுண்டத்தில் மகாலட்சுமியாகவும் சொர்க்கத்தில் சொர்க்கலட்சுமியாகவும், இராஜ்ஜியத்தில் இராஜலட்சுமியாகவும் இல்லங்களில் கிரஹ லட்சுமியாகவும் இருப்பதாகவும் ஐதீகம். ஒரு வீட்டிலிருந்து, இன்னொரு வீட்டிற்கு தீபமேற்றப்பட்ட விளக்கை எடுத்துச்செல்லக்கூடாது என்பது ஐதீகம்.

சொக்கனுக்கு உகந்த சொக்கப்பனை திருக்கார்த்திகை தினத்தன்று எல்லா சிவாலயங்களிலும் முருகன் கோவில்களிலும் கோவிலுக்கருகில் பனை மரத்தை

நட்டுவைத்து அதில் பனையோலைகளையும் மூங்கிலையும் இணைத்துக் கட்டுவர். மாலையில், சொக்கப்பனை கொழுத்தப்படும். ஆணவம் எரிகிறது. கூடவே அஞ்ஞானமும் எரிகிறது என்பதே இதன் தத்துவம். சிவன் முப்புரம் எரித்த பாவனையைக் காட்டுவதற்காக சிவாலயங்களில் சொக்கப்பனை கொளுத்துகின்றனர். சொக்கப்பனை என்பது சொர்க்கப்பனை, சுவர்க்கப்பனை, சொக்கர் (சிவபெருமான்) பனை என்பவற்றின் பொருளாக அறிஞர்கள் கூறுகின்றனர்.

கற்பக தருவான பனை மரம் கல்பதரு என்று அழைக்கப்படுவது. தேவமரம் என்று அழைக்கப்படுவது. பனைமரத்தின் வேர் முதற்கொண்டு நுனி வரை அனைத்துப் பொருட்களும் மனித வாழ்க்கைக்கு உதவுகின்றது. வேறு எந்த மரத்திற்குமில்லாத சிறப்பு பனை மரத்திற்கு மட்டுமுண்டு. பனையோலை பச்சையாக இருந்தாலும் தீ பட்டவுடன் கொழுந்து விட்டு எரியும் தன்மையுடையது. பனை மரத்தினைப் போல, வாழ்க்கை முழுவதும் பிறருக்கு உதவியாக இருந்தால், ஸதேக முத்தி அதாவது இந்த வாழ்க்கையிலேயே சுவர்க்கத்தை கண்டு முத்தியடைய முடியும் என்பதைக் காட்டுவதற்காகவே சொர்க்கப்பனை அல்லது சொக்கப்பனை அமைந்துள்ளது. பனையோலை கொண்டு கோபுர வடிவில் செய்து அதனை ஏற்றுவதால் தெரியும் ஜோதியைத் தரிசனம் செய்வது பெரும் முத்தியைத் தருமென்பது ஆன்றோர்கள் வாக்கு. சிவபெருமான் அடிமுடி தெரியா வண்ணம் பிரம்மா, விஷ்ணுவுக்கு காட்சியளித்ததையும் நினைவூட்டும் விதமாகவும் சொக்கப்பனை ஏற்றப்படுவதாக புராணங்கள் தெரிவிக்கின்றன.

கார்த்திகை தீபநாளன்று, தேங்காய்த் துண்டு, வெல்லம் கலந்த பொரி உருண்டைகளைச் செய்து வழிபட்டால் நல்ல பலன்கள் கிடைக்குமென்பது ஐதீகம். பொரியிலுள்ள வெண்மை நிறம் சிவனையும், வெல்லம் பக்தியையும் தேங்காய் மாவலியையும் குறிப்பதாக ஐதீகம். முருகக் கடவுள் கார்த்திகேயன் பொறி வடிவத்தில் தோன்றியதால், அதன் அடையாளமாகப் பொரி உருண்டை படைப்பதாகச் சொல்வோரும் உண்டு. சிவனுக்கு சொக்கன் என்ற பெயரும் உண்டு. ஆதலால் இதற்கு சொக்கப்பனை என்ற சொல் ஏற்பட்டது. சிவபெருமானை ஜோதி சொரூபமாகக் காணவே சொக்கப்பனை கொளுத்துகின்றனர்.

**ஆறிரு தடந்தோள் வாழ்க வறுமுகம் வாழ்க வெற்பைக்**
**கூறுசெய் தனிவேல் வாழ்க குக்குடம் வாழ்க செவ்வே**
**ளேறிய மஞ்ஞை வாழ்க யானைதன் னணங்கு வாழ்க**
**மாறிலா வள்ளி வாழ்க வாழ்கசீ ரடியா ரெல்லாம்.**

**– கச்சியப்ப சிவாசாரியார் அருளிய கந்த புராணம்**

# அன்னையின் அமுது

கண் விழிக்கும்
காலை பொழுதினிலே!
மண் மணக்கும்
வாசம் காற்றினிலே!

தாவி பிடிக்கும்
முழு நிலவெல்லாம்!
ஆவி பறக்கும்
இட்லி குண்டாவிலே !

பருப்பினை கடைந்து
பல்சுவை கூட்டி!
பலகாய் கறிகள்இட்டு
பதமுடன் சேர்த்து!
நறுமண மல்லியும்
நலம்தரும் கறிவேப்பிலையும்!
காரமும் சாரமும்
பலவகை மசாலாவும்!
எண்ணையில் பொறிந்திட
கடுகது கவிபாட!
கடைந்து கடைந்து
நாளும் சேர்த்த
அமிர்தமும் தோற்றுப்போகும்
நீ சமைத்த சாம்பாருக்குமுன்!

அரிசியுடன் உளுந்தும்
அன்புடன் கலந்து!
ஆட்டு கல்லில்
அழகுடன் அரைத்து!

புளித்தால் பொங்கும்
சுவைக்க ஏங்கும்!
கல்லில் எண்ணெய்
சீராக சுற்றி !
வட்ட வட்டமாக
ஊற்றிட விரியும்!
பிட்டு தின்றால்
நாவினில் கரையும் !
நாளும் ஆசை
நீசுடும் தோசை!

மணம் கமழும்
மல்லி சட்னி !

மதி மயங்கும்
தக்காளி சட்னி!
தேன் சொரியும்
தேங்காய் சட்னி!
வகை வகையாக
வாரி கொள்ளணுமே!

பலநூறு ஆயிரம் செலவழித்து
பலகடைகள் தேடி உண்டாலும்
அன்னை படைக்கும் அமுதுக்கு
ஈடு இணை இல்லையே!

அமுதூட்டும் அன்னை கரங்களில்
ஆலயம்மேவும் இறைவன் வாழ்கிறான்!

# 10000 வருட பழமை மிக்க தமிழ் சிவலிங்கம் அமெரிக்காவில்

## எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி என்பதற்கான ஆதாரங்கள்

தென்னாடுடைய சிவனே போற்றி! எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி!! என்ற வாழ்த்தொலிகள் இன்றும் தமிழ்ச்சிவாலயங்களில் ஒலித்துக்கொண்டே யிருக்கின்றன. அதெப்படி எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி என்பது வரும் என்ற சந்தேகம் பலருக்கும் இருந்திருக்கும் அதனுடைய விளக்கங்கள்

**சிவபூமிதான் நாம் வாழும் பூமி .**

இந்த ஆதாரங்களை முழுமுதல் பரம்பொருள் மகிமை என்ற புத்தகம் நெடுகக் காணலாம். தில்லி பல்கலைக்கழகத்தின் ஆளுகைக்குட்பட்ட தயால்சிங் கல்லூரியில் தமிழ்த்துறைத்தலைவராக இருக்கும் முனைவர் சிவப்பிரியா என்பவர் இந்த ஆதாரங்களைத் தொகுத்துள்ளார்.

**குவைப்பதி மலிந்த கோவே போற்றி! (திருவாசகம்)**

குவைத் போன்ற அரபுநாடுகளில் இருந்த எண்ணற்ற சிவாலயங்கள் இடித்துத் தள்ளப்பட்டன. இராமேஸ்வரம் போன்ற திருக்கோயிலைப் போன்ற அமைப்பு உடைய மக்கீஸ்வரம் என்ற சிவாலயம் இடிக்கப்பட்டு மக்கா என்ற மசூதியாக்கப்பட்டது. இன்றும் மக்கா மசூதியில் ஏழு அடி உயரம் உள்ள லிங்கத்தைக் காணலாம். மக்கீஸ்வரரான லிங்கப் பரம்பொருளையே சைத்தான் என்று கூறி முகம்மதியர்கள் கல்லெறிகின்றனர். (பக்கம் 282,283)

தமிழகத்திலுள்ள ஊரான திருமால்பேறு போன்ற அமெரிக்காவிலுள்ள பேறு என்ற இடம் திருமால் சிவபூஜை செய்த தலமாகும்.
பராசக்தி மயிலாக வந்து சிவபூஜை செய்த மயிலாபுரி, இன்று மயிலாப்பூராக (சென்னை) மருவியுள்ளது.
நரசிம்மர் சிவபூஜை செய்த இடம் சிங்கபுரி. இந்த சிங்கபுரியே தற்போதைய சிங்கப்பூர் ஆகும் (பக்கம் 350, 351).

திருக்கேதீஸ்வரம், திருகோணமலை ஆகிய இலங்கைத் திருக்கோயில்களை தேவாரப் பதிகங்கள் துதி செய்கின்றன (பக்கம் 351).

**ஆமூர்,தைமூர் என்ற தமிழ்நாட்டுத் திருத்தலங்களைப் போன்றே தைமூர் என்ற தலம் ரஷ்யாவில் இருந்ததை இன்றும் வழங்குகின்ற இப்பெயர் எடுத்துக் காட்டுகின்றது.**

உக்கிரப்பாண்டியனுக்கும் உத்திரப்பிரதேசத்திலுள்ள கல்யாணபுரத்து இளவரசிக்கும் நடைபெற்ற திருமணத்தில் சீனா, சோவியத் ஆகிய நாடுகளிலிருந்தும் அரசர்கள் கலந்துகொண்டதை திருவிளையாடற்புராணங்கள் தெரிவிக்கின்றன. ஜாவக நாட்டு மக்கள்(இன்றைய ஜாவா) தமிழ்நாட்டு சிவனடியார்களைப் போற்றி வணங்கியதை மதுரைக்காஞ்சி என்ற சங்க இலக்கியத்து தனிப்பாடல் தெரிவிக்கின்றது.

படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்னும் ஐந்தொழில் புரியும் பரமசிவனைப் பிரம்மன், விஷ்ணு, ருத்ரன் ஆகிய மூன்று தெய்வங்களும் ஒன்றாக வந்து பூஜை செய்து தத்தமக்குரிய உலகங்களையும், வாழ்க்கையையும், பதவிகளையும் பெற்றுக்கொண்ட திருத்தலமே திரியம்பகேஸ்வரம். இவ்வாறு மூன்று மூர்த்திகளும் ஒன்றாக வந்து மும்மூர்த்தி நாயகனைப் பூஜை செய்த திருத்தலமே அமெரிக்காவில் உள்ள திரிநாடு (த்ரிநாட்).

வட அமெரிக்காவில் கொலராடா என்ற ஆற்றங்கரையின் அருகேயுள்ள குன்றின் மீது 10,000 ஆண்டுகள் பழமை வாய்ந்த சிவாலயம் கண்டறியப்பட்டுள்ளது.இத்தாலியில் 5,000 ஆண்டுகள் தொன்மையான சிவலிங்கம் கண்டெடுக்கப்பட்டு அங்குள்ள பொருட்காட்சி சாலையில் வைக்கப்பட்டுள்ளது. அலெக்சாண்டிரியாவில் 129 அடி உயரம் உள்ள லிங்கப்பரம்பொருள் ஊர்வலமாகக் கொண்டு செல்லப்பட்டது.

அயனீச்வரம் என்ற சிவலாயத்தைச் சுற்றி உருவான நகரமே பிற்காலத்தில் அயர்லாந்தாக மாறியது. கிழக்கு பாரதத்தில் நாகளேச்சுரம் பிற்காலத்தில் நாகலாந்து என்று மாறியது. பாபிலோனியா களிமண் பட்டயங்களில் சிவன் என்ற திருநாமம் காணப்படுகிறது. சிவன் என்ற இந்த தமிழ்ப்பெயர் ஒரு மாதத்தின் பெயராகவும் இருந்தது. சிவ நாமங்களில் எல்சடை என்ற பெயர் புகழ்பெற்று விளங்கியது. எல் என்ற தமிழ்ச்சொல்லுக்கு இருள் என்று பொருள்.சடை என்பது ஜடா என்ற சமஸ்க்ருதச் சொல்லின் தமிழ்வடிவம். எல்சடை என்றால் கரிய சடையுடையவன் என்று பொருள் சிறிய ஆசியாவில் சிவன் என்ற பெயரில் ஒரு நகரம் உள்ளது. சிரியா நாட்டின் ஒரு நாணயத்தில் சிவவடிவம் உள்ளது.

**பொல்லாப் புலாலை நுகரும் புலையரை**
**எல்லாருங் காண இயமன்றன் தூதுவர்**
**செல்லாகப் பற்றியத் தீவாய் நரகத்தில்**
**மல்லாக்கத் தள்ளி மறித்துவைப் பாரே.**

**– திருமூலர் அருளிய திருமந்திரம் – 10ம் திருமுறை**

# உண்மையில் தீபாவளி

பற்ற வைத்தால் வெடித்துக் கரியாகும்
பட்டாசுக்கு செலவிடும் பணத்தை
பசியுற்ற மக்களுக்கு பிரித்தளித்து
ஏழையின் சிரிப்பில் காண்பதே ஏற்றமிகு தீபாவளி !

பலவித பலகாரங்கள் பக்குவமாய் செய்து
சுற்றம்நட்புடன் பகிர்வதற்கு பதிலாக
சிலவறியோர் குடிசை கதவுதட்டி
இன்முகத்துடன் தருவதே தித்திக்கும் தீபாவளி !

உறவுகளுக்குள் மனக்கசப்பு உண்டெனில்
நல்ல நாளில் நாடிப்போய்
விரிசலால் பிரிவு வருமுன்பே
உறவை புதுப்பிப்பதே உன்னத தீபாவளி !

சொந்தம் ஒதுக்க அனாதைஇல்லம் அரவணைக்க
அன்பிற்கேங்கும் ஆதரவற்ற முதியோரின்
நொந்த உள்ளம் ஆறுதலுற பேசி
பொழுதுபோக்கும் காலமே பொன்னான தீபாவளி !

தொலைக்காட்சியின் உத்தியால் ஈர்க்கப்பட்டு
விழியில் விளக்கெண்ணெய் விட்டவாறு
விலைமதிப்பில்லா நேரத்தை தொலைக்காமல்
வீட்டாருடன் உறவாடுவதே உல்லாச தீபாவளி !

வாழ்த்துக்களை வார்த்தைகளால் பரிமாறி
வாழ்க்கையில் மகிழ்ச்சி மலர
வருகின்ற தீபஒளி திருநாளில்
தீயன கழித்து நல்லன கூட்டுவதே உண்மையில் தீபாவளி .....!!!

அனைவருக்கும் தீபாவளி திருநாள் வாழ்த்துக்கள் !

**– சியாமளா இராஜசேகர்**

# சிவனுக்கு மிகவும் உகந்த விரதம், சோமவார விரதம்

கார்த்திகை மாதம் வரும் திங்கட்கிழமைதான் சோமவார விரதமாகக் கடைப்பிடிக்கப்படுகிறது. இந்த விரதம்தான் சிவனுக்கு மிகவும் உகந்த விரதம். சிவனின் தலையில் இருக்கும் சந்திரன் சோமவார விரதத்தைக் கடைப்பிடித்தான். அதனால் அவன் சிவனுக்கு மிகவும் பிடித்தவனாகி சிவனின் தலையிலேயே இடம்பெற்றான். இந்த அளவிற்கு சோமவார விரதம் மிகவும் புகழ்பெற்றது.

ஒருமுறை இந்த விரதத்தை எப்படிக் கடைப்பிடிப்பது என்று பார்வதி சிவனிடம் கேட்டார். அதற்கு சிவன் காலையில் எழுந்து நீராடி தினக்கடமைகளை முடிக்க வேண்டும். வீட்டிலேயே விரிவாக சிவபூசை தினமும் செய்யும் ஒரு வேதியரையும் அவரது மனைவியையும் அழைத்து அவர்களை சிவபார்வதியாக நினைத்து அவர்களுக்கு முடிந்தவரை தானம் செய்யவேண்டும். அதன் பின் பகல் முழுவதும் உண்ணாமல் விரதமிருந்து முன்னிரவில் ஒருவேளை மட்டும் உணவருந்தி சிவசிந்தனையுடன் விரதமிருக்க வேண்டும். வீட்டிலேயே விரிவாக பூசை செய்ய இயலாதவர்கள் சிவன் கோயிலுக்குச் சென்று சிவனுக்கு அபிஷேகம் செய்து வேதியர்களுக்கும் அடியவர்களுக்கும் அன்னதானம் செய்யவும். இந்த சோமவார விரதம் இருப்பவர்கள் எனக்கு மிகவும் விருப்பமானவர்கள். அவர்களுக்கு என்னிடத்தில் இடம்கொடுப்பேன் என்று சிவன் கூறுகிறார்.

கார்த்திகை மாத சோமவாரங்களில் ஒவ்வொரு வாரம் ஒவ்வொரு சிவாலயத்திலும் சங்காபிஷேகம் செய்வார்கள். கார்த்திகை மாதத்தில் இறைவன் அக்கினிப் பிளம்பாக இருப்பார். எனவே குளிர்விக்கும் பொருட்டு சங்காபிஷேகம் செய்வார்கள். கார்த்திகை மாதம் சூரியன் பகை வீடான விருட்சிகத்தில் சஞ்சரிப்பார். அப்போது சந்திரன் நீசத்தில் இருப்பதால், தோஷம் என்பர். இந்த தோஷத்தை நீக்கவே சங்காபிஷேகம் நடத்தப்படுகிறது.

ஒவ்வொருவர் வீட்டில் உள்ள நீரிலும் ஸ்ரீமத் நாராயணன் கார்த்திகை மாதத்தில் தினமும் எழுந்தருளுகிறார். அம்மாதத்தில் செய்யப்படும் பூசை 1000 மடங்கு பலன் தரும். இப்பூசையால் பாவங்கள், வறுமை விலகுவதுடன் வளமான வாழ்வும் பெறலாம். கார்த்திகை மாதத்தில் கஸ்தூரியால் அபிஷேகம் செய்து, தாமரை மலரால் அர்ச்சனை செய்தால் மகாவிஷ்ணுவை விட்டு, லஷ்மிதேவி நம் வீட்டில் நிரந்தரமாகத் தங்கிவிடுவாள். வில்வ இலையால் விஷ்ணுவையும், சிவனையும் பூசிப்பவர்களுக்கு மறுபிறவி இல்லை. கார்த்திகை மாதத்தில் சாளக் கிராமத்தை துளசியால் அர்ச்சித்தால் வைகுண்டம் செல்லும் பாக்கியம் கிட்டும். ஆலயத்தில் சுவாமிக்கு முன் பூசை நேரத்தில் ஷோடச தீபாராதனை செய்வார்கள். இதனை வெறும்

சடங்காக நினைக்கக்கூடாது. உலகின் தோற்றத்தையும், ஒடுக்கத்தையும் காட்டும் குறியீடாகக் கருதி இந்தத் தீபாராதனையை வழிபடவேண்டும். அதனால் சுகபோகமும் ஞானமும் கிட்டும்.

கார்த்திகைப்பொரி மிகவும் வெண்மையாகவும் தூய்மையாகவும் இருக்கும். பொரியுடன் தேங்காயின் துருவலைச் சேர்க்கிறோம். தூயபக்திக்கு அடையாளமாக வெல்லம் சேர்க்கிறோம். வெண்பொடி பூசிய, என்றென்றும் களங்கமற்ற தூயவனாகிய சிவபெருமானை நெற்பொரி குறிப்பிடுகிறது. வள்ளல்தன்மை படைத்த மாவலியை தேங்காயின் துருவல் உணர்த்துகிறது. கள்ளங்கபடமில்லாத தூயபக்திக்கு வசப்படும் இறைவன் பொரிக்குள்ளும் தோன்றுவான் என்பது தத்துவம்.

எல்லாத் திருமணத்திலும் அருந்ததியைப் பார்ப்பது என்பது முக்கிய நிகழ்ச்சியாகும். கற்புக்கரசியாகிய அருந்ததியை வசிட்டர் தன் மனைவியாக அடைந்தது இந்த சோமவாரவிரதத்தைக் கடைப்பிடித்ததால்தான். பொதுவாக இந்த விரதத்தை பெண்களே கடைப்பிடிக்கின்றனர். இருந்தாலும் ஆண்களும் இந்த விரதத்தைக் கடைப்பிடித்து நல்ல வாழ்க்கைத் துணைவியை அடையலாம். சோமவாரத்தில் குற்றாலத்தில் நீராடி குற்றாலநாதர், குழல்வாய்மொழி அம்மையைத் தரிசிப்பது நல்லது. இதேபோல சுசீந்திரம், தாணுமாலய சுவாமியை வணங்கி வருவதும் உத்தமம். நாமும் இந்தக் கார்த்திகை மாதத்தில் சோமவார விரதமிருந்து சிவனின் அன்புக்குரியவனாகி அவனது பொற்பாதத்தைச் சரணடைவோம்.

நன்றி : கவிதமிழன்
'விதை2 விருட்சம்' இணையத்தளம்

**இரும்பசி யுடையே னன்னை**
**யினிய பிட்டளிப்பை யாகிற்**
**குரம்பு கொண்ட டைப்பன் யானே**
**கோலறை முழுது மென்னக்**
**கரும்புறத் துகின்மே லிட்ட**
**பிட்டினைக் கரத்தா லள்ளி**
**விரும்பியிங் கிதனைக் கொள்வா**
**யென்றனள் விரும்ப மிக்காள்**

— திருவாதவூரடிகள் புராணம்
( மண்சுமந்த சருக்கம் )

# சக்திபீடங்கள் தோன்றிய வரலாறு முக்கிய நிகழ்வுகள்

பிரம்மபுத்திரனான தட்சன் 1000 ஆண்டுகள் கடுந்தவம் புரிந்து சிவபரம்பொருளிடம் 'பிரஜாபதி' பட்டத்தினையும், ஈரேழு புவனங்களும் தலைமையையும் உலகீன்ற உமையன்னையைப் புதல்வியாக அடையும் பெரும் பேற்றினையும் வரமாகப் பெறுகின்றான். அன்னையும் "தாட்சாயணி" எனும் திருநாமம் தாங்கியருளி தட்சனின் அரண்மனையில் இனிது வளர்ந்து வருகின்றாள்.

எண்ணற்ற ஆண்டுகள் சர்வவல்லமையும் பெற்று ஆட்சிபுரிந்துவந்த மமதையால் தன்னையே "ஈசுவரன்" என்றெண்ணத் தொடங்கிவிடுகின்றான் தட்சன். தர்மநெறிகளைப் புறந்தள்ளி, தன்னுடைய கட்டளைகளையே அனைவரையும் தர்மமெனக் கொள்ளுமாறு செய்கின்றான். ஆணவமலத்துடன் ஆலமுண்டருளும் பிரானை அணுகவும் ஒண்ணுமோ!! அறிவிக்கப்பெற்றிருந்த மணநாளுக்கு முன்னரே (தட்சன் அறியாத நிலையில்) மகாதேவர் அன்னை சதி தேவியை சுவீகரித்தருளித் திருக்கைலையில் எழுந்தருளியிருக்கின்றார்.

இதன் தொடர்ச்சியாக நடந்தேறிய சில நிகழ்வுகளால், வரமளித்த இறைவனிடமே கடுங்குரோதங்கொண்டு, வரைமுறையின்றிச் சிவஅபராதச் செயல்களில் ஈடுபடுகின்றான் தட்சன். ஆதிமூர்த்தியை அவமதிக்கும் பொருட்டு ஹரித்துவாரில் கங்கைக் கரையில் அமைந்துள்ள "கனகல்" எனும் தலத்தில், பெரும் யாகமொன்றினையும் தொடங்குகின்றான். கைலையேகியருளிய அன்னை தட்சனுக்கு உய்யும் வழியினை உரைத்தருளும் பொருட்டு யாகசாலையில் தோன்றியருளுகின்றாள்.

தட்சனோ ஜகத் ஜனனியான அன்னையின் பரத்துவத்தினை உணராது, அன்னையை அவமதித்ததோடு நில்லாது சர்வேசுவரரையும் கடுமையாக நிந்தித்துப் பேசுகின்றான். சிவநிந்தனையைக் கேட்கப்பெறாத அன்னை, சிவஅபராதியான தட்சனின் புதல்வியாக எடுத்திருந்த தன்னுடைய தேகத்தினை முற்றிலும் ஒழிக்கும்பொருட்டு, யோகத்தீயினால் புதியதொரு யாககுண்டம் ஒன்றினை அவ்விடத்திலேயே தோற்றுவித்தருளி, அதனுள் தன் திருமேனியினை மாய்த்துக் கொள்கின்றாள்.

இதன் தொடர்ச்சியாக சிவபரம்பொருளின் கடுங்கோபத்திலிருந்து வெளிப்பட்டருளிய அன்னை ஸ்ரீ காளி மற்றும் வீரபத்திரர் இருவரும் தட்சனின் யாகசாலையில் தோன்றி, அவ்விடத்திருந்தோர் அனைவரையும் வதைத்துச் சம்ஹாரம் புரிந்து, யாகசாலையை சர்வநாசத்திற்குள்ளாக்கிய நிகழ்வினைச் சிவபுராணம் விரிவாகப் பேசுகின்றது. இத்தலத்தில் அன்னை சதிதேவி தன்

திருமேனியை மாய்த்துக் கொண்டருளிய யாககுண்டத்தினை இன்றும் தரிசிக்கலாம்.

வேதமுதல்வர் கடும் சீற்றத்துடன் அன்னை சதிதேவியின் எரியுண்ட திருமேனியைச் சுமந்தவண்ணம் ஊழிக்கூத்தினை ஆடியருளத்தொடங்க, அண்டங்கள் அனைத்தும் சிதறுண்டு மகாபிரளயம் உருவாகும் அபாயம் தோன்றுகின்றது. ஸ்ரீ மகாவிஷ்ணு மறைமூர்த்தியை அமைதியுறச் செய்யும்பொருட்டு, தன் சுதர்சன சக்கிரத்தால் தேவியின் திருவுடலை பல்வேறு துண்டுகளாக அகண்ட இப்பூவியில் சிதறும்வண்ணம் செய்தருள, அச்சமயமுதல் அவை 51 சக்தி பீடங்களாகத் திகழ்கின்றன.

பின்னர் சிவபெருமானின் திருவருளால் ஆட்டுத்தலையினைப் பெற்று உயிர்த்தெழும் தட்சன் ஊழிமுதல்வரின் திருவடி தொழுது நிற்கின்றான். இறைவனின் இருப்பை உணரவும், தர்மங்களைப் பின்பற்றவும் மறுக்கும் ஒவ்வொருவரும் தட்சனின் வடிவங்களே. ஆன்மாக்கள் முதலில் இறைவனை மறுப்பதும், அறியாமையால் எதிர்ப்பதும், பின்னர் ஞானம் பெற்றுப் பணிவதும், காலாகாலமாக நடந்துவரும் போராட்டம். ஆட்டின் தலை அஞ்ஞானத்தைக் குறிப்பது. ஞானம் என்றுமே அஞ்ஞானத்தை வெல்லுமென்பது இந்நிகழ்வின் உட்குறிப்பு.

தேவராஜன் நடராஜன்
'இது சனாதன தர்மம்' – வலைப்பூ.

## திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் அருளிய 2ம் திருமுறை

**பூம்பாவாய்! வளையல் அணிந்த இளமகளிர்**
**வாழும் வளமான தெருக்களைக் கொண்டுள்ள**
**மாமயிலையில் விளங்கும் தளர்வற்ற**
**கபாலீச்சரம் என்னும் கோயிலில் விளங்கும்**
**பெருமானைக் கார்த்திகைத் திங்களில்**
**நிகழும் விழாக்களின்போது சாந்தணிந்த**
**இளநகில்களைக் கொண்ட மகளிர் திருவிளக்குகள்**
**ஏற்றிக் கொண்டாடும் காட்சியைக் காணாது செல்வது முறையோ**

**– வலைப்பூ பக் – 17**


# இலண்டன் சைவ முன்னேற்றச் சங்கத்தின் நாற்பதாவது ஆண்டு விழாக் காட்சிகள்








# இலண்டன் சைவ முன்னேற்றச் சங்கத்தின் நாற்பதாவது ஆண்டு நிறைவு விழாக் காட்சிகள்







இலண்டன் ஈஸ்ற்காம் முருகன் கோவிலில் நடை பெற்ற கௌரவம்


**இலண்டன் சைவ முன்னேற்றச் சங்கத்தின் நாற்பதாவது ஆண்டு விழாவில் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன் பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்பித்தார்.**







# திருவண்ணாமலைத் தீபம்




கார்த்திகைத் தீபத்திருநாள் மிகவும் தொன்மைவாய்ந்த திருநாள். இத்திருநாள் தமிழர்களால் பல்லாயிரம் ஆண்டுகளாகக் கொண்டாடப்படுகிறது. கி.மு. 2500 ஆண்டுகளுக்கு முன்னரே தமிழிலக்கியங்களிலும் மற்றும் சங்ககால இலக்கியங்களிலும் கார்த்திகைத் தீபத்தைப் பற்றிய குறிப்புகள் உள்ளன. இந்த நாளை திருவண்ணாமலையில் மிகவும் சிறப்பாகக் கொண்டாடப்படுவதால், இதை திருவண்ணாமலைத் தீபம் என்றும் அழைப்பார்கள்.

### திருவண்ணாமலைத் தலச்சிறப்பு

இந்தியாவின் தமிழ்நாடு மாநிலத்தில் அமைந்துள்ள மிகவும் பழைமையான நகரங்களில் ஒன்றாகும். புனித நகரமாகக் கருதப்படும் இந்நகரில் அண்ணாமலையார் திருக்கோவில் உள்ளது. இத்தலத்தின் மூலவர் அருணாசலேசுவர் என்றும், அம்பிகை உண்ணாமுலையாள் என்றும் அழைக்கப்படுகிறார். முக்திதரும் தலங்களில் திருவண்ணாமலை நினைத்தாலே முக்திதரும் என்பது சைவர்களின் நம்பிக்கையாகும். 24 ஏக்கர் பரப்பளவு 6 பிரகாரங்கள் 9 கோபுரங்கள் கொண்ட கோயிலாகும். சிவபெருமான் இத்தலத்தில் சுயம்பு மூர்த்தியாக உள்ளார். இத்தலத்தில்

உள்ள மலையே சிவலிங்கம் என்பது நம்பிக்கை. முருகன், விநாயகர், அர்த்தநாரீஸ்வரர், பெருமாள், பைரவர், பிரம்மலிங்கம், பாதாளலிங்கம் ஆகிய சந்நிதிகள் உள்ளன. இத்தலம் பஞ்சபூத தலங்களில் அக்கினித் தலமாகும். ஆறு ஆதாரத் தலங்களில் திருவண்ணாமலை, மணிபூரகத் தலமாக விளங்குகிறது. திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் முதலானோர் அண்ணாமலையாரை வந்து தரிசித்து பதிகங்கள் பாடியுள்ளார்கள். மாணிக்கவாசகர் திருவண்ணாமலைக்கு வந்து "திருவெம்பாவை", 'திருவம்மானை' பதிகங்களையும் அருளியுள்ளார்.

திருவண்ணாமலையின் வயதை 260 கோடி ஆண்டுகள் என்று மதிப்பிட்டுள்ளார்கள். இது உலகிலேயே மிகப் பழமையான மலையென்று டாக்டர் பீர்பால்சகானி என்ற விஞ்ஞானி தெரிவித்துள்ளார். இம்மலையானது யுகங்களின் அழிவுகளிலும் அழியாமல் இருப்பதாகக் கூறப்படுகிறது. எனவே கிருதாயுகத்தில் அக்கினி மலையாகவும், திரேதாயுகத்தில் மாணிக்கமலையாகவும், துவாபரயுகத்தில் பொன்மலையாகவும், கலியுகத்தில் கல்மலையாகவும் மாறியிருப்பதாக நம்பப்படுகிறது. திருவண்ணாமலையில் மலையே சிவபெருமானாகக் கருதப்படுகிறது. எனவே கோயிலில் இறைவனை வலம்வருதலைப் போல் மலையை வலம்வரும் வழமை இங்குள்ளது.

இக்கோவிலில் ஆறு காலப் பூசை தினமும் நடைபெறுகிறது. பஞ்சபருவப் பூசைகளும் சுக்ரவாரம் மற்றும் சோமவாரப் பூசைகளும் சிறப்பாக நடைபெறுகின்றன. பஞ்சபருவப் பூசைகள் என்று அழைக்கப்படுபவை அமாவாசை, கிருத்திகை, பிரதோசம், பௌர்ணமி, சதுர்த்திப் பூசைகளாகும்.

திருவண்ணாமலை சிவாலயத்தில் ஆண்டுக்கு 4 முறை பிரம்மோற்சவம் நடைபெறுகிறது. திருவண்ணாமலை அருணாலேசுவரர் கோவிலில் கார்த்திகைத் திருவிழாவும் பங்குனி உத்திரத் திருவிழாவும் இராஜேந்திர சோழமன்னர் காலத்திலிருந்தே சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகிறது.

### மகாதீபம்

இவற்றுள் கார்த்திகை மாத பிரம்மோற்சவ விழா 10 நாட்கள் கொண்டது. இந்த விழாவின் 10ம் நாள் கார்த்திகை தீபத்திருநாளான திருக்கார்த்திகை ஆகும். இச்சிவாலயத்தில் கார்த்திகை தீபநாளன்று மகாதீபம் ஏற்றப்படுகிறது. அந்நாளில் சிவாலயத்திற்கு வந்து திருவண்ணாமலையை வழிபடுவதை பக்தர்கள் பெரும்

பாக்கியமாகக் கருதுகின்றனர். மகாதீபம் கார்த்திகைத் தீபத்திருவிழா நாளில் மாலையில் அண்ணாமலை மலையின் உச்சியில் ஏற்றப்படுகிறது. இம்மலை 2668 அடி உயரமானதாகும்.

மாலை நேரத்தில் பஞ்சமூர்த்திகள் தீபமண்டபத்தில் எழுந்தருளுகின்றனர். அவர்களைத் தொடர்ந்து வருடத்திற்கு ஒருமுறை மட்டுமே திருவிழாக் கண்டருளும் அர்த்தநாரீஸ்வரர் உற்சவ மூர்த்தியாகத் தீபமண்டபத்திற்கு எழுந்தருளுவார். அவர் முன்பு அகண்ட தீபம் ஏற்றப்படுகிறது. இத்தீபம் ஏற்றப்படுகின்ற அதே நேரத்தில், மலையில் மகாதீபம் ஏற்றப்படுகிறது. இறைவனை சோதிவடிவமாகத் தரிசிக்கும் இவ்வழிபாட்டிற்கு பிரம்மதேவருக்கும் திருமாலுக்கும் இடையிலான முரண்பாடே காரணமாகும்.

படைக்கும் கடவுளாகிய பிரம்மாவுக்கும் காக்கும் கடவுளாகிய திருமாலுக்கும் இருவருமே பெரியவர்கள் என்று தமக்குள் சர்ச்சை ஏற்பட்டு சிவபெருமானிடம் சென்று தம்மில் யார் பெரியவர் எனக் கேட்க, சிவபெருமான் தனது அடியை அல்லது முடியை உங்களில் யார் கண்டு வருகிறீர்களோ அவர்தான் பெரியவரெனக் கூற திருமால் வராக அவதாரமெடுத்து அடியினைக் காண பூமியைக் குடைந்து சென்றார். அடியைக் காணா அடியைச் சோர்ந்து திரும்பினார். பிரம்மன் அன்னப் பறவை உருவெடுத்து மேல் நோக்கிப் பறந்து சென்று முடியைக் காணமுடியாது தயங்கியபோது சிவன் தலைமுடியிலிருந்து தாளம்பூ கீழே இறங்கி வந்ததைக் கண்டு, அதனிடம் சிவனின் முடியைக் காண எவ்வளவு தூரம் உள்ளது என்று கேட்க, தாளம்பூ தான் சிவனாரின் சடைமுடியிலிருந்து நழுவி 40000 ஆண்டுகளாக கீழ்நோக்கி வந்து கொண்டிருக்கிறேன் எனக் கூற, பிரம்மன் முடியைக் காணும் முயற்சியை விடுத்து தாழம்பூவிடம் ஒரு பொய் சொல்லும்படி கூறினார். திருமாலிடம், சிவன் முடியை பிரம்மன் கண்டதாக சாட்சி சொல்லும்படி கேட்டுக்கொண்டதற்கிணங்க, தாழம்பூ சாட்சி சொல்ல, முற்றுமுணர்ந்த சிவபெருமான், பொய் சொன்ன பிரம்மதேவனுக்கு பூலோகத்தில் ஆலயம் அமையாதென்றும், பொய் சாட்சி சொன்ன தாழம்பூ சிவபூசைக்கு உதவாது என்றும் சாபமிட்டார். திருமாலும் பிரமனும் தானென்ற அகந்தை நீங்கிட உலகுக்கு உணர்த்த சிவபெருமான் அடியையும் முடியையும் காணமுடியாத ஜோதிப்பிழம்பாக – லிங்கோற்பவராக நின்ற இடம் திருவண்ணாமலை. அம்பிகையின் வேண்டுதலுக்காக சிவபெருமான் திருக்கார்த்திகை நாளிலே தன்னுடைய இடப்பாகத்தை அளித்து அர்த்தநாரீஸ்வரராய் நின்ற பெருமைக்குரிய தலம் திருவண்ணாமலையாகும்.

### தீபவழிபாட்டின் மகிமை

ஒரு சமயம், சிவாலயம் ஒன்றில் அங்குள்ள எலியொன்று தன்னையுமறியாமல் அங்குள்ள தீபவிளக்கில் திரியை மேலும் தீண்டி ஜோதியைப் பெரிதாக்குகின்றது. இதன் பயனாகத்தான், அந்த எலி அடுத்தபிறவியில் மகாபலி சக்கரவர்த்தியானதாகவும், பெருமானின் பாதத்தில் முத்தியடைந்ததாகவும் புராணங்கள் கூறுகின்றன. தான் என்ன செய்கின்றோம் என்பதையே அறியாத எலி ஆலய தீபத்தை சுடர் விட்டு பிரகாசிக்கச் செய்ததால் முத்தியடைந்ததென்றால் மனதில் தெய்வ நம்பிக்கையுடன் ஆலயத்தில் ஏற்றச் செய்யும் விளக்கிற்கு மனிதர்களுக்கு பெரும் பாக்கியத்தைத் தரக்கூடியதாகும்.

தீபமேற்றுவதால் அஞ்ஞான இருள் நீங்கி மெய்ஞ்ஞான வெளிச்சம் கிடைக்கின்றது. இதுவே உயிர்களுக்கு பேரானந்தத்தைத் தரக்கூடியது.

தீப வழிபாடு பற்றி சங்க இலக்கியங்களிலிருந்து திருஞானசம்பந்தர் தேவாரம் வரை பல குறிப்புகள் கிடைக்கின்றன.

"மைம்மிசை யின்றி மலைவிளக்குப் போலோங்கிசெம்மையி னின்றிலங்குந் தீபிகை – தெம்முனையுள்" – என்று தொல்காப்பியம் புறத்திணையும்,

"வானம் ஊர்ந்த வளங்கொளி மண்டிலம்நெருப்பெனச் சிவந்த உருப்பு அவிர் அம்கட்டு – என்னும் ஔவையார் கூற்றும் (அகநானூறு),

"ஒளிவளர் விளக்கே" எனும் ஒன்பதாம் திருமுறையும்,

"ஞானச் சுடர்விளக்காய் நின்றாய் நீயே" என்ற அப்பரின் தேவாரமும்

"கார்த்திகை விளக்கீடு காணாதே போதியோ" என்று திருஞானசம்பந்தர் தேவாரமும் தீப வழிபாட்டினைப் போற்றுகின்றன.

## விளக்கீடு

கார்த்திகை தீப நன்நாளை விளக்கீடு எனப் பெயரிட்டு வெவ்வேறு தினங்களில் வெவ்வேறு ஆலயங்களில் வழிபடுவர்.

**குமராலயதீபம் :** முருகன் ஆலயங்களில் கொண்டாடப்படும் கார்த்திகை மாதத்தில் கார்த்திகை நட்சத்திரம் கூடிவரும் நாள்.

**விஷ்ணு ஆலய தீபம் :** விஷ்ணு ஆலயங்களில் கொண்டாடப்படும். கார்த்திகை மாதத்தில் ரோகிணி நட்சத்திரம் கூடிவரும் நாள்.

**சர்வாலய தீபம் :** ஏனைய இந்து ஆலயங்களிலும் வீடுகளிலும் கொண்டாடப்படும். கார்த்திகை மாதத்து முழுமதித்திதி.

விளக்கீட்டுத் தினத்தில் ஆலயங்களிலே சொக்கப்பனை ஏற்றுவது வழக்கம். சொக்கப்பனை என்பது சொர்க்கப்பனை, சுவர்க்கப்பனை, சொக்கர்(சிவபெருமான்) பனை என்பனவற்றின் திரிபாக அறிஞர்கள் கூறுவார்கள்.

திரிபுரஸம்ஹாரத்தினையும், அடிமுடி தெரியாவண்ணம் பிரம்ம விஷ்ணுக்களுக்கு காட்சியளித்ததையும் நினைவூட்டும் விதமாகவும் சொக்கப்பனை ஏற்றப்படுவதாக நம்மப்படுகிறது. ஆலயங்களின் முன்புறத்தே வாழைமரம் நட்டு பனையோனை, தென்னோலைகளால் அதனைச் சுற்றியடைத்து கோபுரம் போன்ற சொக்கப்பனை அமைக்கப்படும். இறைவனை எழுந்தருளப்பண்ணி சொக்கப்பனைக்கு அக்கினியிட்டு சோதிவடிவாகக் காட்சியளிக்கச்செய்து சிவபெருமான் சோதிப்பிழம்பாகத் தோன்றிய காட்சியை நினைவுகூர்ந்து வழிபடுவர். கார்த்திகைத் தீப நன்நாளில் மாலை நேரத்தில் வீடுகளில் தீப விளக்குகள் வரிசையாக ஏற்றிக் கொண்டாடப்படும்.

இவ்விழா அறிவியல் ரீதியாகவும் முக்கியமானது. கார்த்திகைமாத பெருமழை காரணமாக பூச்சிகளின் குறிப்பாக நுளம்புகளின் பெருக்கம் அதிகரித்து மக்களுக்கும் கால்நடைகளுக்கும் பயிர்களுக்கும் பாதிப்பு ஏற்பட வாய்ப்புள்ளது. தீபத்திருநாளில் ஏற்றப்படும் தீபங்களில் பயன்படுத்தப்படும் எண்ணெய் பஞ்சுத் திரியில் எரியும் போது ஏற்படும் நெடி சிறந்த நுளம்பு விரட்டியாகும். மேலும் பல்வேறு தீங்கான பூச்சிகள் சொக்கப்பனை மற்றும் ஆங்காங்கே உள்ள தீபஒளியால் கவரப்பட்டு அழிக்கப்படும். இதன் மூலம் நோய்ப்பரம்பல் கட்டுப்படுத்தப்படும். இத்தகைய அறிவியல் ஆன்மீகப் பின்னணி உள்ள விழாவை நாமும் கொண்டாடுவதன் மூலம் வையகத்தில் வாழ்வாங்கு வாழ்வோம்.

**தொகுப்பு : ப. சேயோன்**

## திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் அருளிய
## 2ம் திருமுறை

**வளைக்கை மடநல்லார் மாமயிலை வண்மறுகில்**
**துளக்கில் கபாலீச் சரத்தான்றொல் கார்திகைநாள்**
**தளத்தேந் திளமுலையார் தையலார் கொண்டாடும்**
**விளக்கீடு காணாதே போதியோ பூம்பாவாய்.**

# ஆறுமுகநாவலர் ஒரு நோக்கு

ஈழத்துத் தமிழினம் தனது பெருமைமிக்க பாரம்பரியத்தை, பண்பாட்டை, பழக்கவழக்கத்தை, கலை, கலாசாரத்தை இழக்கவேண்டிய ஒரு பயங்கரமான சூழலின்போது அவதரித்தவர்தான் நல்லைநகர் தந்த ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமான். ஈழத்தமிழர் தம் சமய வாழ்வில் புகுந்துவிட்ட களைகளை நீக்க முயன்றும் புறச்சமய வெள்ளத்திலிருந்து அணைகட்டி காவல் செய்ய முயன்றும் பெரும் தொண்டாற்றியவர் ; வெற்றியும் கொண்டவர்.

"நல்லைநகர் ஆறுமுகநாவலர் பிறந்திலரேல் சொல்லு தமிழெங்கே, சுருதியெங்கே?" என்ற சி.வை.தாமோதரம்பிள்ளையின் அழியாக்கூற்றே இதற்கு நற்சான்றாகும். அன்னார் நல்லைநகரில் 18-12-1822 அன்று அவதரித்தார். நாவலருக்கு சிறுவயதிலேயே தமிழையும் சைவசமயத்தையும் வளர்த்து அபிவிருத்தி செய்யவேண்டும் என்னும் ஆசை உண்டாகி அது பேராசையாகி அதற்காக எந்த இடர் வரினும் எதிர்கொள்ளும் துணிவும் உண்டாயிற்று.

இக்காலகட்டத்தில் தான் கிறிஸ்தவ பாதிரியாரான பார்சிவல்துரையின் நட்பு நாவலருக்குக் கிட்டியது. அந்த நேரத்தில் பார்ப்பவர்களுக்கு நாவலரும் பார்சிவல் துரையும் நேர் விரோத கொள்கையுடையவர்கள். ஒருவருக்கொருவர் முரண்பட்டவர்களென்றே எண்ணத் தோன்றியது. ஆனால் உண்மை அதுவல்ல. அவர்கள் இருவரும் தத்தம் சமயத்திற்கு விசுவாசமாய் இருந்தார்கள். இருவரும் உண்மைச் சமயவாதிகளாக இருந்தமையால் ஒருவரோடு ஒருவர் மோதிக்கொள்ளவில்லை. மாறாக நல்ல நண்பர்களாக வாழ்ந்து வந்தார்கள். இந்த நட்பு மன ஒருமைப்பாடு ஒரு சைவனுக்கும் ஒரு கிறிஸ்தவனுக்கும் இன்னுமொரு கிறிஸ்வனுக்கும் இருந்ததில்லை.

நாவலருக்கு பார்சிவல்துரையின் நட்பு கிடைத்தவிதம் சுவாரஷ்யமானது, புதுமையானது. ஆங்கிலம் கற்கும் முகமாக நாவலரது 12ஆவது வயதில் அவர் பார்சிவல் துரையிடம் அனுப்பப்பட்டார். இவ்வாறு ஆங்கிலக் கல்வி கற்கும்போது தமிழ்க்கல்வியை இன்னமும் அதிகமாகக் கற்கவேண்டுமென்ற பேராவலால் அக்காலத்தில் மிகவும் பிரசித்தி பெற்றிருந்த சரவணமுத்து புலவரிடத்திலும் சேனாதிராஜ முதலியாரிடத்திலும் திருக்குறள், நன்னூற் காண்டிகையுரை, இரகுவம்சம், விருத்தியுரை, திருக்கோவையார், சிலப்பதிகாரம், சீவகசிந்தாமணி போன்ற அரும்பெரும் நூல்களைக் கற்றுத் தேர்ந்தார்.

ஆங்கிலப் பாடசாலையில் கல்வி கற்று மேல் வகுப்புக்கு வந்தபோது ஆறுமுகப்பிள்ளையின் (இதுதான் நாவலருக்குப் பெற்றோர் சூட்டிய இயற்பெயர்) இருமொழித்திறமை கண்டு வியந்த பார்சிவல்துரை தமிழ் கற்பிக்கவும் வேண்டிக்கொண்டார். மேலும் பைபிளைத் திருத்தி தமிழில் அச்சேற்றுவதற்கு உதவி புரியுமாறும் அன்புடன் கேட்டுக் கொண்டார்.

அந்த அன்புக்கட்டளையை சிரமேற்கொண்டு பைபிளைத் தமிழில் எழுதி முடித்தவுடன் அதனை அச்சிடும் பொருட்டு பார்சிவல் துரையுடன் சென்னை மாநகருக்கு வந்தார். அங்கிருந்த பாதிரிமார் நாவலர் தமிழில் தவறுள்ளதென்று தடைசெய்ய முயற்சித்தனர். ஆயினும் சென்னை நகரிலே மிகச்சிறந்த வித்துவானாக இருந்த திரு. மகாலிங்க ஐயர் தமிழ் பைபிளை முற்றாக வாசித்து அதில் பிழையேதுமில்லையென்றும் அப்படியே அச்சிடலாமென்றும் கூறி நாவலரின் யாழ்ப்பாணத் தமிழைப் போற்றி சிலாகித்துப் பாராட்டினார்.

மீண்டும் யாழ்ப்பாணம் திரும்பியபோது அநேகர் சைவசமயத்திலிருந்து கிறிஸ்தவ சமயத்திற்கு மதம் மாறுவதை அறிந்து மனம் வருந்தினார். இந்நிகழ்வு தமது சமயத்திலுள்ள உண்மையை அறியாமலே நிகழ்கின்றது என்பதை அறிந்தார். சைவசமய பிரசங்கங்களும் சைவநூல் வெளியீடுகளுமே மக்களுக்கு உண்மையை உணர்த்தி மதம் மாற்றத்தை நிறுத்தமுடியும் என்பதைத் தெளிவாக உணர்ந்து கொண்டு செயலில் இறங்கினார்.

யாழ். வண்ணார்பண்ணையில் வள்ளல் வைத்திலிங்கச் செட்டியாரால் கட்டப்பட்ட வைத்தீஸ்வரன் கோயில் வசந்தமண்டபத்திலே தமது 25ஆவது வயதிலே 31-12-1947 அன்று தனது முதலாவது சைவப்பிரசங்கத்தை ஆரம்பித்தார். தொடர்ந்து ஒவ்வொரு வாரமும் இரவில் பிரசங்கம் நடைபெற்றது.

அவரைப் பின்பற்றி அவரது பள்ளி நண்பரான கார்த்திகேய ஐயரும் சைவ பிரசங்கங்கள் நடாத்திவந்தார். இவ்விருவரும் வேதாகமங்கள், சிவபக்தி, யாக்கை நிலையாமை, மகளிர் ஒழுக்கம், திருவிழாக்கள், சிவதீட்சை, தர்மம், கல்வி கற்பித்தல், பசுக்காத்தல், பிரபஞ்ச மாயை, பேதைமை, அறிஞரைத் தழுவி நடத்தல், தீட்சை, கொல்லாமை, கள்ளுண்ணல் போன்ற இன்னோரன்ன தலைப்புக்களில் பிரசங்கங்கள் செய்து சைவத்தையும் தமிழையும் வளர்த்தார்கள்.

இப்பிரசங்கங்கள் கைமேற் பலனை ஏற்படுத்தின. மதுமானம் அருந்திய பலர் அப்பழக்கத்தைக் கைவிட்டார்கள். மாமிச போசனம் செய்தோர் செய்யாது விட்டார்கள். உருத்திராட்சம் தரியாது ஆலய தரிசனம் செய்தோர் உருத்திராட்சம் தரித்து செவ்வனே தரிசனம் செய்யத் தலைப்பட்டார்கள், பலர் விரதங்கள் அனுஷ்டிக்க ஆரம்பித்தார்கள். ஆலயப் பக்கமே தலைவைத்துப் படுக்காதவர்கள், தேவாரம், திருவாசகம், திருப்புகழ் பாடி மனமுருகி ஆண்டவனை வேண்டினார்கள்.

இந்த வெற்றிகளால் களிப்புற்ற நாவலர், நல்ல சமய நூல்கள் குறைவாக இருப்பதையும் இருக்கின்ற நூல்களிலே எழுத்துப்பிழை, சொற்பிழை, கருத்துப்பிழை இருப்பதனையும் கண்ணுற்று அச்சியந்திரசாலை ஒன்றை நிறுவுதலும் சைவ நூல்கள் வெளியிடுதலும், ஆத்திசூடி, கொன்றைவேந்தன் போன்ற நூல்களை மீள்பதிவு செய்தலும் சைவமும் தமிழும் தழைத்தோங்க நல்ல வழியென உணர்ந்து செயற்படத் தொடங்கினார்.

அதன் முதற்படியாக தாம் ஸ்தாபித்த சைவப்பிரகாச வித்தியாசாலையை தமது நம்பிக்கைமிக்க மாணாக்கர் சிலரிடம் ஒப்படைத்துவிட்டு தமது பால்யகால நண்பரான சதாசிவப்பிள்ளையை அழைத்துக்கொண்டு அச்சியந்திரம் ஒன்றை வாங்குமுகமாக 1849ம் ஆண்டு சென்னை நகரை நோக்கிப் புறப்பட்டார். சென்னையில் சிலகாலம் தங்கியிருந்த நாவலர் பெருமான் சூடாமணி நிகண்டின் உரையையும், சௌந்தர்ய லகரியையும் அச்சில் பதிப்பித்தார். யாழ். மீண்ட அன்னார் "வித்தியானுபாலன அச்சியந்திரசாலை" என்ற அச்சகத்தை நிறுவி முதல் முயற்சியாக நீதிசாரங்களையும் சைவசமய சாரங்களையும் திரட்டி வசன ரூபங்களாக எழுதி முதற்பால பாடத்தின் இறுதியிலே ஆத்திசூடி, கொன்றைவேந்தன் என்ற நீதி நூல்களையும் 2ம் பாலபாடத்தில் அவைகளுக்கு உரையையும் எழுதிச் சேர்த்து அச்சிட்டு வெளியிட்டார். தொடர்ந்து பல நூல்கள் அவரால் வெளியிடப்பட்டன. அவற்றுள் "கொலை மறுத்தல்", "திருமுருகாற்றுப்படை உரை" என்பன குறிப்பிடத்தக்கவை.

நாவன்மைமிக்க இவருக்கு அன்னாரது 27ஆவது வயதில் 1849இல் "நாவலர்"பட்டம் கிடைத்தது. நாவலர் பெற்ற பெறுபேறுகள் வெற்றிகண்டு திருப்தியடையவுமில்லை, இறுமாப்போ, பெருமிதமோ கொள்ளவுமில்லை. மாறாக நல்ல ஆசிரியர்களையும் சைவப்பிரசாரகர்களையும் உருவாக்க 5 ஆண்டுத் திட்டமொன்றை நிறுவினார். திட்டம் வருமாறு : வருடந்தோறும் 20 மாணவர்களுக்கு ஒழுக்கமும்சைவ அறிவும் தமிழ்ப்புலமையும் போதிக்கப்படும். 5ம் வருடத்தில் 5 வருட பயிற்சிபெற்ற 20 தமிழ் இளைஞர்கள் இருப்பார்கள். அவர்கள் பயிற்சிமுடிந்து வெளியேற அடுத்தவருடம் புதிதாக 20 இளைஞர் பயிற்சியில் சேருவார்கள்.

பயிற்சி முடிந்த 20 இளைஞர்களின் ஒரு பகுதியினர் கற்று நல்ல ஆசிரியர்களாக இருப்பார்கள். இன்னுமொரு பகுதியினர் சைவப்பிரசாரகராக இருப்பர். மிகுதியினர் முக்கிய ஆலயங்கள் தோறும் நியமனம் பெற்று கோயில் பூசை முதலிய அன்றாட கருமங்களை சாஸ்திர முறைப்படி நடாத்த வழிகாட்டிகளாகவும் உசாத்துணைவர்களாகவும் இருப்பர். மேலும் பெற்றோர்களுடன் அளவளாவி சமயதீட்சை பெற்று சமயாசாரம் உடையவர்களாகத் திகழ வழிவகுப்பர். ஆனால் என்னை துரதிஷ்டம்! இத்திட்டம் நிறைவேறமுன்னரே அதாவது 5–12–1879 அன்று தனது 57ஆவது வயதில் பெருமானை எல்லாம்வல்ல இறைவன் தன்னுடன் அழைத்துக் கொண்டான். வாழும்போதே அன்னாரை சைவசப்பெருமக்கள் "5ம் குரவர்" என மனதாரப் பாராட்டி பட்டம் வழங்க எத்தனித்தனர். நாவலர் பெருமான் அதை ஏற்றுக்கொள்ள மறுத்ததுடன் அந்த முயற்சிகளையும் வன்மையாகக் கண்டித்தார். பேச்சாற்றலுக்கு புகழ் பெற்றதால், "நாவலர்" என்றும் உரைநடையினைக் கையாண்ட திறமையால் "வசனநடை கைவந்த வல்லாளர்" என்றும் போற்றிப் புகழப்பட்ட நாவலர் பெருமானுக்கு 1971ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 29ம் திகதி அரசு முத்திரை வெளியிட்டு கௌரவித்தது.

**நன்றி – தினக்குரல் 26-11-2010**

# பிள்ளையார் கதை விரதம்

விநாயகப் பெருமானுக்குரிய விரதங்களாக வாரந்தோறும் சுக்கிரவார விரதமும், மாதந்தோறும் சதுர்த்தி விரதமும், வருடத்திற்கொருமுறை விநாயக சஷ்டி விரதமும் அனுஷ்டிக்கப்படுகின்றன. இவற்றுள் விநாயக சஷ்டி விரதத்தை பிள்ளையார் கதை, பெருங்கதை விரதம், மார்கழி சஷ்டி விரதம் என பலதரப்பட்ட பெயர்களால் அழைப்பர். கார்த்திகை மாதம் அபரபக்கப் பிரதமை முதல் மார்கழி மாதத்து பூர்வபக்கச் சஷ்டி வரையுமுள்ள 21 நாட்கள் இந்த விரதம் கடைப்பிடிக்கப்பெறுகிறது.

இவ்விரத ஆரம்ப நாளிலேயே, பவித்திரமணிந்து சங்கல்பம் செய்யும்போது 21 இழையோடு கூடிய காப்பை ஆண்கள் வலது கையிலும், பெண்கள் இடது கையிலும் கட்டிக்கொள்வர். முதல் 20 நாட்களும் ஒவ்வொரு பொழுது உணவுண்டு, இறுதிநாள் உபவாசமிருந்து, மறுநாள் பாரணையுடன் இவ்விரதம் நிறைவு செய்யப்படும்.

21 நாட்களும் கரும்பு, இளநீர், எள்ளுருண்டை, தேன், அவல், அப்பம், வள்ளிக்கிழங்கு, மோதகம், முக்கனிகள் என்பவற்றை நிவேதனம் செய்தல் சிறந்தது என்பதை, "கரும்பும் இளநீரும் காரெள்ளும் தேனும் விரும்பும் அவல்" என்ற பாடல் வரிகளும், "எள்ளு பொரிதேன் அவல் அப்பமிக்கும் பயறும் இளநீரும் வள்ளிக்கிழங்கும், மாம்பழமும், வாழைப்பழமும், பலாப்பழமும், வெள்ளைப்பாலும் மோதகமும் விரும்பிப் படைத்தேன்" என்ற பாடல் வரிகளும் உணர்த்தி நிற்கின்றன.

இந்த நாட்களில் பிள்ளையார் கதை, விநாயக புராணம், விநாயக கவசம், விநாயகர் அகவல், காரியசித்தி மாலை, போற்றித்திருவகவல், வருக்கக்கோவை, தத்துவஞானத் திருவகவல், மூத்த பிள்ளையார் திருமும்மணிக்கோவை, மூத்த நாயனார் திருவிரட்டைமணிமாலை, திருநாரையூர் விநாயகர் இரண்டை மணிமாலை போன்றவற்றை பாராயணம் செய்து மனம் வாக்கு காயம் என்னும் மூன்றினாலும் விநாயகப் பெருமானை மெய்யன்போடு வழிபடுதல் வேண்டும்.

இரு கைகளையும் முட்டியாகப் பிடித்து வலது கையால் வலது நெற்றியோரத்திலும், இடது கையால் இடது நெற்றியோரத்திலும் (இரு கைகளாலும் ஒரே நேரத்தில்) 3 முறை குட்டிக் கும்பிடுவது வழமை. தெளிவான அறிவையும், ஞானத்தையும் பெறுவதற்காக விநாயகரை குட்டிக்கும்பிட்டு வழிபடுகிறோம். அத்துடன் இடது கையால் வலது காதையும் வலது கையால் இடது காதையும் பிடித்து,

உட்கார்ந்தும் எழுந்தும் 3 முறை தோப்புக்கரணம் செய்தல் வேண்டும். இவை விநாயப் பெருமானுக்கு மட்டுமே உரிய வழிபாட்டு முறைகள்.

கபிலதேவநாயனார் அருளிய மூத்த நாயனார் திருவிரட்டை மணிமாலை என்ற நூலிலிருந்து ஒரு பாடல் விநாயகர் வழிபாட்டின் பயன் பற்றிக் கூறுகிறது.

"திருவாக்கும் செய்கருமம் கைகூட்டும் செஞ்சொல்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனைமுகத்தானைக்
காதலால் கூப்புவர் தம் கை."

யானை முகம், 3 கண்கள், 5 கரங்கள், தொந்தி வயிறு, மூஷிக வாகனம் எனக் காட்சி தரும் விநாயகரை வணங்கினால், எம்முடைய வல்வினைகள் எல்லாம் வேருடன் அறுக்கப்படுமென கபிலதேவநாயனார் "விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்" என்ற பாடலில் கூறியுள்ளார்.

பிள்ளையார் கதை விரதநாட்களில் விநாயகர் ஆலயங்களில் விசேட அபிடேகங்கள், விசேட பூசைகள், ஆவாஹனம், தாபனம், சந்நிதானம், ஸந்நிரோதனம், அவகுண்டனம், தேனு முத்திரை, பாத்யம், ஆசமநியம், அர்க்யம், புஷ்பதானம், தூபம், தீபம், நைவேத்யம், பாநீயம், ஜபஸமர்ப்பணை, ஆராத்திரிகம் ஆகிய 16 வகையான உபசாரங்கள், பஞ்சமுக அர்ச்சனை, இலட்சார்ச்சனை என்பன நிகழ்ந்து வரதபண்டிதர் இயற்றிய பிள்ளையார் கதை படிக்கும் நிகழ்வு இடம்பெறும்.

"செந்தமிழ் முனிவன் செப்பிய காதையுங் கந்தபுராணக் கவிதையி லுள்ளதுவும்
இலிங்க புராணத் திருந்தநற் கதையும் தேர்ந்தெடுத் தொன்றாய்த் திரட்டி"

சுன்னாகத்தைச் சேர்ந்த வரதபண்டிதர் அவர்கள் பிள்ளையார் கதை என்ற நூலை அருளிச் செய்தார்.

விநாயக பெருமானின் திருவவதாரம் பற்றி "பிடியதனுருவுமை கொளமிகு கரியது" என்ற தேவாரத்திலும், "மதகரி உரித்தோன் மதகரியாக, மதர்விழி உமைபிடி வடிவம் அதாகிக், கூடிய கலவியில் குவலயம் விளங்க, நீடிய வானோர் நெறியுடன் வாழ அந்தணர் சிறக்க, ஆனினம் பெருக, செந்தழல் வேள்வி வேதாகமம் சிறக்க, அறம் பல பெருக, மறம் பல சுருங்கத், திறம்பல அரசர் செகதலம் விளங்க, வெங்கரி முகமும் வியன்புழைக்கையோடு, ஐங்கர தலமு மலர்ப்பதமும் இரண்டும், பவளத்து ஒளிசேர் பைந்துவர் வாயுந், தவளக் கிம்புரித் தடமருப்பு இரண்டும், கோடி சூரியர் போற் குலவிடு

மேனியும், பேழைபோல் அகன்ற பெருங்குட வயிறும், நெற்றியில் நயனமும் முப்புரிநூலும், கற்றைச்சடையும் கனகநீண்முடியுந், தங்கிய முறம்போல் தழைமடிச்செவியுமாய், ஐங்கரத்து அண்ணல் வந்து அவதரித்தலும்" எனப் பிள்ளையார் கதை வரிகளிலும் உள்ளது.

திருமால் பொய்ச்சாட்சி சொன்னதால், உமையம்மையின் சாபத்திற்கு ஆளானார். கடும்பசி கொண்ட குருட்டு மலைப்பாம்பாகி, கணபதி இருக்கும் ஆலமர நிழலில் கிடந்து தேவலோக சப்தகன்னியரிடம் விரதமிருக்கும் முறையறிந்து, தானும் முறைப்படி விரதமிருந்து பாம்புரு நீங்கப்பெற்றார். வச்சிரமாலி என்ற மன்னன் இவ்விரதத்தை நோற்று உடற்பிணி நீங்கப்பெற்று, மீண்டும் அரசாட்சி செய்து திலோத்தமையை மணம் புரிந்து பல மைந்தர்களைப் பெற்று கைலையை அடைந்தான்.

விக்கிரமாதித்தன் என்ற அரசனின் மனைவி இலக்கணசுந்தரி இவ்விரதத்தைக் காப்புக்கட்டி நோற்கத்தொடங்கி, சில நாட்களின் பின் உறுதி தளர்ந்து, காப்பை அவிழ்த்து எறிந்தாள். அதன் பயனாக மன்னன் அரண்மனையை விட்டு வெளியேற்ற, தொடர்ந்து வணிகன், உழவன், குயவன், துணி துவைப்பவன், மாலைக்காரன் போன்றோரும் வெளியேற்ற, இறுதியில் ஔவைப்பாட்டியின் வீட்டில் தங்கி ஔவை உபதேசிப்படி விநாயக விரதத்தை முறைப்படி நோற்று, விக்கிரமாதித்தனை அடைந்தாள். எனவே விரதமிருப்பவர்கள் முறைப்படி திரிகரண சுத்தியுடன் இருக்கவேண்டும்.

இவ்விரதத்தை நியமமாக அனுட்டித்தவர்கள் பெறும் பலன்கள் "பொன்னுமிகுங் கல்விமிகும் புத்திரரோ டெப்பொருளும் மன்னு நவமணியும் வந்தணுகும்", "உள்ளபடி நோற்றார் மிக மகிழ்வர்", "சூலிலார் நோற்கிற் சுதரை மிகப் பெறுவர்" என்ற வரிகள் மூலம் அறியக்கிடக்கின்றன. மேலும் பிள்ளையார் கதையைக் கேட்டவர்கள் பெறும் பலன்கள் "சொற்பெருகக் கற்றவரு நோற்றவருங் காதலித்துக் கேட்டவரும், பெற்றிடுவர் கற்பகத்தின் பேறு" " நோலாதருகிருந்து கேட்டார்க்கும் வராது கேடு" என்ற வரிகள் மூலம் அறியக்கிடக்கின்றன.

விநாயகர் வழிபாட்டில் பயன்படுத்தப்படும் 21 பத்திரங்கள் பற்றிய பாடல்

மேதகு மாசிப்பச்சை நறுங்கையாந்தகரை

வில்வமுடனூமத்தை நொச்சி நாயுருவி

ஏதமில் கத்தரி வன்னி அலரி காட்டாத்தி
எருக்குமருதுடன் மால்பேரியம்பு காந்தி
மாதுளையே உயர்தேவதாரும் நெல்லி
மன்னுசிறு செண்பகமே கெந்தளி பாதிரியே
ஓதரிய அறுகிவையோர் இருபத்தொன்றும்
உயர் விநாயக சதுர்த்திக் குரைத்திடு பத்திரமே”

21 வருடங்கள் அனுட்டித்தபின் விரத உத்யாபனம் செய்யலாம். விரதத்திற்குரிய பலன்கள் சித்திக்கவேண்டுமெனப் பிரார்த்தித்து சிவனடியார்களுக்கு திருவமுது வழங்கி, அர்ச்சகர்களுக்கு தானம் கொடுத்து விரதத்தை நிறைவு செய்யலாம்.

விநாயகப் பெருமானை வழிபட்டு ஔவையார் சங்கத்தமிழ் மூன்றிலும் புலமை பெற்றதும், அகத்தியமுனிவர் காவிரியாற்றைக் கமண்டலத்தில் பெற்றதும், இந்திரன் காவிரியாற்றைப் பெருகச் செய்ததும், நம்பியாண்டார் நம்பிகள் வேதாகமங்களை ஓதாது உணர்ந்ததுவும், வியாசர் பதினெண் புராணங்களை வெளிப்படுத்தியதும் வெள்ளிடைமலை.

சூலிலார் நோற்கிற் சுதரை மிகப் பெறுவர்
சாலமிகும் வெங்கலியார் தாநேற்கில் – மேலைப்
பிறப்பெல்லா நல்ல பெருஞ்செல்வ மெய்திச்
சிறப்பிலே வாழ்வார் சிறந்து.

– சிவஞானச்சுடர் கேசினி கோணேஸ்வரன்


**திங்களணி சடைப்பெருமான் பூசை யாற்றித்**
**திரிமதிலும் கடந்திடமுன் னின்றான் யாவன்**
**றங்குகடற் புரிவரைப்பி னெழியோ னாதி**
**சகலருக்கு மூறுதவிர்க் கின்றான் யாவ**
**னங்கணவன் மெய்ச்சரித மொழிபெயர்ப்ப வேண்டி**
**யவனடியே சரணாக வடுத்து ளோர்க்கு**
**மங்கலசிந் மயமதுரத் தமிழ்ச்செம் பாடல்**
**வாரிமட மடையுடைத்து வளரு மன்றே.**

**– விநாயக புராணம்**

# விஜயதசமி விழா








## ஏடு தொடுக்கும் நிகழ்ச்சி

# விஜயதசமி விழா



வாழை வெட்டு
நிகழ்வு




தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தில் சிவாச்சாரியார்கள் தங்குவதற்காக புதிதாக "சிவாச்சாரிய மடம்" அமைக்கப்பட்டு விஜயதசமி நாளில் தேவஸ்தான தலைவரால் திறந்து வைக்கப்பட்டது.



மாவைக்கந்தன் விஜயதசமி நாளில் துர்க்காதேவி தேவஸ்தானத்துக்கு
வருகைதந்த காட்சி

# சிவ அஷ்டாஷ்ட திருவுருவங்கள்

ஒரு மரம் ஒரு வித்திலிருந்து முளைவிட்டு தோன்றுகின்றது. மரத்தை நாம் காண்பதற்கு முன்பாக அது வித்தாக ரூபாரூபமாக வித்து வடிவத்தில் இருந்தது. அம்மரமே வித்தாக தோன்றுவதற்கு முன் எவ்வித ரூபமில்லாமல் இருக்கின்றது. ஒரு விதை இவ்வாறு அரூபமாயிருந்து ரூபாரூபமாகிய ரூபத்தைப் பெறுகின்றது. இது போன்றே ஒரு குட்டியும் ஒரு பிள்ளையும் ஒரு பிண்டத்தில் தோன்றும். பிண்டமும் எவ்வித ரூபமற்ற ஒன்றிலிருந்து உண்டாகும். இவ்வாறு எல்லாவற்றையும் நோக்குங்கால் இப்பூவுலகில் அண்ட சராசரங்கள் எல்லாம் உருவங்கள் பெறுமாறு இயக்கும் இறைவனும் இவ்வகையிலே திருவுருவம் கொண்டிருந்திருக்க வேண்டும் என்பது புலனாகும். அருவம், உருவம், அருவுருவம் என மூவகையாகக் காட்சி தரும் இறைவனே தன்னை உணர்த்த பல உருவத் திருமேனியாக தரிசிக்க சில வடிவங்கள் மேற்கொண்டுள்ளான்.

**பஞ்சமுக தரிசனம்**

சிவ அடியவர் ஒவ்வொருவருக்கும் சிவனின் பஞ்சமூர்த்த தரிசனம் கிடைக்க வேண்டும். பஞ்சமூர்த்தம் என்பது சத்யோஜாதம் – படைத்தல், வாமதேவம் – காத்தல், தத்புருஷம் – மறைத்தல், அகோரரூபம் – அழித்தல் (ஒடுக்கம்), ஈசானம் – அருளல் ஆகும். பிரம்மன் ஒவ்வொரு கற்ப யுகத்திலும் சிவனை நினைந்து தவமிருந்து ஒவ்வொரு முகமாக தரிசனம் கண்டு இன்புற்றார். அந்த ஒவ்வொரு முகத்திற்கும் ஐந்து வடிவங்கள் என மொதம் 25 வடிவங்கள் சிறப்பானதாகக் கருதப்படும்.

சுவேத லோகித கற்பத்தில் தவமிருந்த பிரம்மனுக்கு காலை இளம் சூரியனைப் போன்ற பேரெழில் பொங்கும் பச்சிளம் பாலகனாய் காட்சி தந்து அருளினார். இந்த பொலிவே சத்யோஜாதம் எனப்படும். சத்யோஜாதம் – பிருதிவித் ததத்துவம் அதிலிருந்து தோன்றிய நந்தினி என்ற பெயருள்ள கபிலவர்ணமுள்ள கோவின் கோமயத்தால் தயாராகும் பஸ்மம் – விபூதி.

1. இலிங்கோத்பவர்
2. சுகாசனர் – நல்லிருக்கை நாதர்
3. ஹரிஹரர் – கேவவார்த்தமூர்த்தி – மாலொருபாகர்
4. அர்த்தநாரீஸ்வரர் – உமைபங்கன்
5. உமாமகேசர் – உமேசர்

ரத கற்பத்தில் பிரம்மன் தவமிருந்து மானும் மழுவுடன் சிவபெருமான் காட்சி அருள். இந்த வாமதேவ திருத்தோற்றத்தை தரிசித்து வழிபடுோர் பிறப்பு இறப்பு இன்றி இறைவனின் பாதக் கமலங்களை அடையும் பேரின்ப வாழ்வுதனை அடைவர். வாமதேவம் – நீர்த்தத்துவம் அதிலிருந்து தோன்றிய பத்ரை என்ற பெயருள்ள கருப்பு நிறமுள்ள பசுவின் கோமயத்தால் தயாராகும் பஸ்மமம் – பஸிதம்.

இந்த வடக்குமுக வாமதேவ தோற்றத்திற்குகந்த முகங்கள் ஐந்து. அவை

6. கங்காளர்
7. சக்ரதானர்
8. கஜாந்திகர் – கஜாந்திகமூர்த்தி
9. சண்டேசானுக்ரஹர்
10. ஏகபாதர் – ஏகபாதமூர்த்தி

பீதகற்பத்தில் பிரம்மன் ஈசனைப் பணிந்து தியானம் செய்து கொன்றைப்பூ அணிந்த திருச்சடையில் இளஞ்சந்திரனை தரித்தவராகக் காட்சி. இதுவே தத்புருஷ தோற்றம் ஆகும். இந்த தோற்றத்தில் காயத்திரி தேவியை சிருஷ்டித்து நான்முகனுக்கு அளித்தார். இந்த தத்புருஷ தேர்றறத்தையோ, காயத்திரி தேவியையோ சிவமந்திரம் சொல்லி வழிபட்டால் பிறவிக்கடலை கடந்து சிவபதவி கைகூடும் என்றார். தத்புருஷம் – வாயுத்தத்துவம் அதிலிருந்து தோன்றிய ஸு்சீலா என்ற பெயருள்ள வெளுப்பு நிற பசுவின் கோமயத்தால் தயாராகும் பஸ்மம் – க்ஷாரம்.

இந்த கிழக்குமுக தத்புருஷ தோற்றத்திற்குகந்த முகங்கள் ஐந்து. அவை.

11. பிட்சாடனர் – பலிதிரி / பலிகொள் செல்வர்.
12. காமாந்தகர் – காமதகனமூர்த்தி
13. காலசம்ஹாரர் – காலனைக் காய்ந்த பெம்மான் – காலாரி.
14. சலந்தராரி – சலந்திரவதமூர்த்தி
15. திரிபுராந்தகர்.

நீல கற்பத்தில் கடும் தவமிருந்து பிரம்மன், தீச்சுடரும், வாளும் ஏந்திய திருக்கரத்துடன் கருமைநிற மேனியுடன் சிவபெருமான் காட்சி. இது அகோர தோற்றம். பஞ்சமாபாதகங்கள் புரிந்தோரும் தங்கள் தவறை உணர்ந்து சிவபஞ்சாக்ஷர மந்திரத்தை மீண்டும் மீண்டும் ஜபித்து வந்தால் அவர்களைப் பற்றிய தோஷம் விலகும். அகோரம் – தேஜஸ் தத்துவம் அதிலிருந்து தோன்றிய ஸு்ரபி என்ற பெயருள்ள சிவப்புநிற பசுவின் கோமயத்தால் தயாராகும் பஸ்மம் – பஸ்மா.

இந்த தெற்குமுக அகோர தோற்றத்திற்குகந்த முகங்கள் ஐந்து. அவை

16. கஜசம்ஹாரர் – கஜயுக்தமூர்த்தி.
17. வீரபத்திரர்
18. தட்சிணாமூர்த்தி – ஆலமர் செல்வர்.
19. நீலகண்டர் – நீலகண்டமூர்த்தி
10. கிராதகர் – கிராதமூர்த்தி

விசுவரூப கற்பத்தில் பிரம்மன் தவமிருந்து கங்கையும் திங்களும் தாங்கிய திரிசடை, கோரப்பற்கள், நெற்றிக்கண்ணும் கொண்டு இருபக்கமும் இரு மாதர்களுடன் சிவபெருமான் காட்சி தந்து அருள். இது ஈசான தோற்றம். சிந்தையில் இறைவனை வைத்து தவம் புரிந்து பிறவா வரம் அடையலாம். ஈசானம் – ஆகாசத் தத்துவம் அதிலிருந்து தோன்றிய ஸுமனா என்ற பெயருள்ள பல நிற பசுவின் கோமயத்தால் தயாராகும் பஸ்மம் – ரக்ஷா.

இந்த உச்சிமுக ஈசான தோற்றத்திற்குகந்த முகங்கள் ஐந்து. அவை

21. சோமாஸ்கந்தர்
22. நடராஜர்
23. இடபாரூடர் – ரிஷபாரூடர் – விருஷபவாகனன்.
24. கல்யாணசுந்தரர் – மணவழகர்
25. சந்திரசேகரர் – பிறைசூடிய பொம்மன்.

64 உருவங்களில் மேற்கண்ட 25 வடிவங்கள் தவிர மற்ற சிவ வடிவங்கள்.

26. சிவலிங்கம்
27. முகலிங்கம்
28. சதாசிவம்
29. மகாசதாசிவம்
30. இடபாந்திகர்
31. புஜங்களித மூர்த்தி
32. புஜங்கத்திராச மூர்த்தி
33. சந்தியா தாண்டவமூர்த்தி
34. சதாநிருத்த மூர்த்தி
35. சண்டதாண்டவமூர்த்தி – காளிகாதாண்டவமூர்த்தி
36. கங்காதரர், கங்காதரமூர்த்தி
37. சங்காவிசர்ச்சனர்
38. ஜ்வரபக்னமூர்த்தி – சுரகண்டீசர்
39. சார்த்தூலஹரமூர்த்தி
40. பாசுபதமூர்த்தி
41. சரபமூர்த்தி – சிம்மக்னமூர்த்தி / நரசிம்ம சம்ஹாரர்
42. யோகதட்சிணாமூர்த்தி
43. வீணாதட்சிணாமூர்த்தி
45. பைரவமூர்த்தி
46. ஆபதோத்தாரண மூர்த்தி
47. வடுகமூர்த்தி
48. க்ஷேத்ரபாலக மூர்த்தி

49. அகோர அத்திரமூர்த்தி
50. தட்ச யக்ஞஹத மூர்த்தி
51. குருமூர்த்தி
52. அசுவாரூடமூர்த்தி – குதிரையேறுச் செல்வர்
53. ஏகபாத திரிமூர்த்தி
54. திரிபாத திரிமூர்த்தி
55. கௌரிவரப்பிரத மூர்த்தி
56. கௌரிலீலா சமன்விரதமூர்த்தி
57. கருடாந்திக மூர்த்தி
58. பிரமசிரச்சேத மூர்த்தி / பிரமசிரக்கண்டீசர்
59. கூர்ம சம்ஹாரமூர்த்தி
60. மச்ச சம்ஹாரமூர்த்தி
61. வராக சம்ஹாரமூர்த்தி
62. பிரார்த்தனாமூர்த்தி
63. இரத்தபிக்ஷாப் பிரதான மூர்த்தி
64. சிஷ்யபாவ மூர்த்தி / முருகனிடம் பிரணவப் பொருள்கேட்ட வடிவம்.

## திருநாவுக்கரசு நாயனார் அருளிய
## 5ம் திருமுறை

**அன்னம் பாலிக்குந் தில்லைச்சிற் றம்பலம்**
**பொன்னம் பாலிக்கு மேலுமிப் பூமிசை**
**என்னம் பாலிக்கு மாறுகண் டின்புற**
**இன்னம் பாலிக்கு மோஇப் பிறவியே.**

**பொழிப்புரை**

பேரின்ப வீடு நல்கும் தில்லைச் திருச்சிற்றம்பலம் பொன்னுலக வாழ்வையுந் தரும். இத்தகைய திருச்சிற்றம்பலத்தை, மேலும் இந்நிலவுலகில் என் அன்பு பெருகும் வகையில் கண்டு, பரமுத்திப் பேரின்ப நிலையை எளிதில் எய்துதற்கு இந்த நல்ல மனிதப் பிறவியை இன்னும் கொடுக்குமோ முதல்வன்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



எங்கள் மகளிர் இல்லத்து மாணவி

**செல்வி நா. சர்வலோஜினி** B.A. (Hons)

கிழக்கிலங்கைப் பல்கலைக்கழகத்தில்

2017–11–11இல் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில்

சிறப்புத் தேர்ச்சியுடனான பட்டத்தைப்

பெற்றுக்கொண்டமை குறித்து

மகிழ்வுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

**நிர்வாக சபை**

**ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்**

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



எங்கள் மகளிர் இல்லத்து மாணவி

**செல்வி பூ. செல்வதியம்மா** B.A. (Hons)

யாழ். பல்கலைக்கழகத்தில்

கலைப்பட்டதாரியாக முதலாம் வகுப்பில்

சித்தியடைந்தமை குறித்து

பாராட்டி வாழ்த்துகின்றோம்.

**நிர்வாக சபை**

**ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்**

இலண்டன் தமிழ்ப்பாடசாலையில் அதிபர் செல்வராசா
வரவேற்கும் காட்சி.








இலண்டன் சைவமுன்னேற்றச்
சங்கத்தின் சேவையைக்
கௌரவித்து
பிரித்தானிய அரசு வெளியிட்ட
முத்திரை.





திருச்செந்தூர் முருகன் திருக்கோவில்



Print Master. T.P. : 021-205 3322